Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    மாசி 11    [22 - 02 - 1993]    திங்கட்கிழமை    ஓசை 04

21-2-1993 யாழ்ப்பாணம்

## கடவுச்சீட்டுக்கள் குறித்து புதிய சட்டங்கள்

ஒருவருக்குச் சொந்தமான கடவுச்சீட்டை வேறொருவர் வைத்திருத்தல், எடுத்துச் செல்லுதல், தபாலில் அனுப்புதல் என்பன சட்ட பூர்வமாக தடைசெய்யும் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. குடிவரவு, குடியகல்வு திணைக்களம் கொண்டுவந்துள்ள இந்த பிரேரணையில் மாற்றுக் கடவுச் சீட்டை வைத்திருத்தல், சட்டவிரோதமாக கடவுச் சீட்டுப் பெறுதல் என்பனவும் குற்றங்களாகப் பிரகடனம் செய்யப்படவுள்ளது.

## ( பொருளாதார தடையை கண்டித்து )

# யாழ்ப்பாணம், கரவெட்டியில் இன்று மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் யாழ். குடாநாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையைக் கண்டித்து யாழ்ப்பாணத்திலும், வடமராட்சியிலும் இன்று மறியல் போராட்டங்கள் நடைபெறவுள்ளன. இம்மறியல் போராட்டங்கள், வடமராட்சியில் கரவெட்டி பிரதேச செயலகம் முன்பும், யாழ்ப்பாணத்தில் அரச அதிபர் காரியாலயம் முன்பும், பிரதேச செயலகம் முன்பும் நடைபெறவுள்ளன.

இப்போராட்டங்கள் பற்றி தெரியவருவதாவது; யாழ் குடாநாட்டு மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையைக் கண்டித்தும் இதனால் ஏற்பட்டுள்ள உணவு மருந்து பொருள் தட்டுப்பாடு, பசி, பஞ்சம். வேலையின்மை மற்றும் பொருளாதார சீரழிவுகள் போன்றவற்றைக்கண்டித்தும் அவற்றை சீர்செய்யக் கோரியும், யாழ்ப்பாணம் மற்றும் தீவகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் யாழ் செயலகம் மற்றும் யாழ். பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டமொன்றை இன்று நடாத்துகின்றனர்.

இன்று காலை 7.00மணிக்கு ஆரம்பமாகும் இப்போராட்டத்தின் முடிவில் மேற்படி பகுதி மக்களினால் யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

மேலும் இம்மறியல் போராட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் இப்பகுதி மக்களினால் மேற்கூறிய இடங்களில் சுழற்சி

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## கிளாலிக் கரையை நோக்கி தொடர்ச்சியான ஷெல் வீச்சு

பூநகரி, ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து கிளாலி பகுதியை நோக்கி நேற்று மாலை 6 மணி தொடக்கம் சுமார் இரண்டு மணி நேரமாக தொடர்ச்சியான எறிகணைத்தாக்குதல் நடைபெற்றுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு தினங்களாக கிளாலி கடற்கரையை நோக்கி இவ்வாறு எறிகணைத்தாக்குதல் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## கிளாலி கடல்நீரேரியில் கடற்படை நடமாட்டம்

### கரையை நோக்கி கலிபர் தாக்குதல்

(கொடிகாமம்)

கிளாலி கடல் நீரேரிப்பகுதியில் கிளாலிக் கரையிலிருந்து சுமார் மூன்றுமைல் தூரத்தில் நேற்று முன் தினம் மாலை 5.00 மணியளவில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான விசைப்படகுகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஒருவரின் சடலம் நேற்று கரை ஒதுங்கியது

(கொடிகாமம்)

கிளாலி கடல் ஏரியில் கடந்த 14 ஆம் திகதி படகுகள் மீது சிறிலங்கா விமானப் படையின் உலங்கு வானூர்திகள் நடத்திய தாக்குதலின் போது பலியான ஒருவரின் சடலம் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் புலோப்பளையி..

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# யாழ்மக்களின்இன்னல்குறித்து வத்திக்கான் பிரதிநிதி கவலை

"யாழ்.குடாநாட்டின்சாதாரண பொது மக்கள் இராணுவ நடவடிக்கைகளாலும், அரசின் பொருளாதாரத்தடை நடவடிக்கைகளினாலும் படும் இன்னல்களை வார்த்தையில் கூற முடியாது. பொருட்களின் விலையேற்றம் போக்குவரத்து சிரமம் இத்தனைக்கும் மத்தியில் அவர்கள் வாழ்க்கை ஒளி இழந்துள்ளது." என்று இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தல பிரதிநிதி அதிவணக்கத்திற்குரிய ஆயர் பன்குறுதுவே இக்கருத்தை அண்மையில் வத்திக்கான் வானொலிக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து; இதுவரை இந்த தேசிய பிரச்சி... இடம்பெற்று வருகின்றன. யுத்தம் இரு சாரரையும் பாதித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

...களைச் சந்தித்துள்ளனர் என்றும் இதனால் இருவரும் பாதிப்படைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

"இது சிவில் யுத்தம் மட்டும் அல்ல, எல்லாவற்றிக்கும் மேலாக இது கெரில்லா யுத்தம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் இது குறுகிய காலத்தில் முடியப் போவதில்லை. நீண்ட வரலாற்றைச் சந்திக்கும் யுத்தம். அரசாங்கம் பலவீனமான

# புலிகள்குறித்த ராணுவத்தின் பிரசாரம் முற்றிலும் பொய்

## - பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ் குடா கடற்பகுதியில் கிளாலியூடான போக்குவரத்திற்கு பொதுமக்களை மனிதக் கேடயங்களாக விடுதலைப் புலிகள் பயன்படுத்துகிறார்கள் என்ற சிறிலங்கா இராணுவத்தினரின் கூற்று முற்றிலும் தவறான பொய்ப்பிரசாரம் என பி.பி.ஸியின் லங்கைக்கான செய்தி முகவர் சுவர்கா நோஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளாலிப் பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்த அவர் இதுபற்றி விபரிக்கையில் கிளாலிக் கடற்பரப்பில் படகில் பயணம்செய்யும் மக்களை உண்மையில் விடுதலைப்புலிகள்தான் கடற்படையினரின் தாக்குதல்களில் இருந்து காப்பாற்றுகிறார்கள்.

இரவு நேரம் கரையோரத்தில் மக்கள் கூடுகிறார்கள். அவர்கள் பயணத்திற்காக புலிகள் கட்டணம் வசூலிக்கிறார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கில் பணம் வசூலிக்கிறார்கள் என இராணுவ அதிகாரிகள் கூறுகிறார்கள் ஆனால் அங்கு மக்கள் 150 ரூபா மட்டுமே கொடுத்துப் பயணம் செய்கிறார்கள்.

அங்கு மக்கள் தாம் பயணம் மேற்கொள்ள புலிகள் அனுமதிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தார்கள். படகுகள் பத்திரமாகப் போய் சேரும் என உறுதியாக தெரிந்தால் அன்றி மக்களை படகில் செல்ல புலிகள் அனுமதிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதியில் வேறொரு அரசு

# இன்று மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் யாழ். குடாநாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையைக் கண்டித்து யாழ்ப்பாணத்திலும், வடமராட்சியிலும் இன்று மறியல் போராட்டங்கள் நடைபெறவுள்ளன. இம்மறியல் போராட்டங்கள், வடமராட்சியில் கரவெட்டி பிரதேச செயலகம் முன்பும், யாழ்ப்பாணத்தில் அரச அதிபர் காரியாலயம் முன்பும், பிரதேச செயலகம் முன்பும் நடைபெறவுள்ளன.

இப்போராட்டங்கள் பற்றி தெரியவருவதாவது; யாழ் குடாநாட்டு மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையைக் கண்டித்தும் அதனால் ஏற்பட்டுள்ள உணவு மருந்து பொருள் தட்டுப்பாடு, பசி, பஞ்சம். வேலையின்மை மற்றும் பொருளாதார சீரழிவுகள் போன்றவற்றைக்கண்டித்தும் அவற்றை சீர்செய்யக் கோரியும், யாழ்ப்பாணம் மற்றும் தீவகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் யாழ் செயலகம் மற்றும் யாழ். பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டமொன்றை இன்று நடாத்துகின்றனர்.

இன்று காலை 7.00மணிக்கு ஆரம்பமாகும் இப்போராட்டத்தின் முடிவில் மேற்படி பகுதி மக்களினால் யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது. மேலும் இம்மறியல் போராட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் இப்பகுதி மக்களினால் மேற்கூறிய இடங்களில் சுழற்சி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கரையை நோக்கி கலிவர் தாக்குதல்

(கொடிகாமம்)

கிளாலி கடல் நீரேரிப்பகுதியில் கிளாலிக் கரையிலிருந்து சுமார் மூன்றுமைல் தூரத்தில் நேற்று முன் தினம் மாலை 5.00 மணியளவில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான விசைப்படகுகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் ஒருவரின் சடலம் நேற்று கரை ஒதுங்கியது

(கொடிகாமம்)

கிளாலி கடல் ஏரியில் கடந்த 14 ஆம் திகதி படகுகள் மீது சிறிலங்கா விமானப் படையின் உலங்கு வானூர்திகள் நடத்திய தாக்குதலின் போது பலியான ஒருவரின் சடலம் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் புலோப்பளையி...

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்மக்களின் இன்னல்குறித்து வத்திக்கான் பிரதிநிதி கவலை

"யாழ். குடாநாட்டின்சாதாரண பொது மக்கள் இரசாயன நடவடிக்கைகளாலும், அரசின் பொருளாதாரத்தடை நடவடிக்கைகளினாலும் படும் இன்னல்களை வார்த்தையில் கூற முடியாது. பொருட்களின் விலையேற்றம் போக்குவரத்து சிரமம் இத்தனைக்கும் மத்தியில் அவர்கள் வாழ்க்கை ஒளி இழந்துள்ளது." என்று இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இத்தனைக்கு மத்தியில் யுத்தத்தின் வேதனைகள், மனித உயிர் பலிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. யுத்தம் இரு சாராரையும் பாதித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தல பிரதிநிதி அதி வணக்கத்திற்குரிய ஆயர் பன்குறுதுவே இக்கருத்தை அண்மையில் வத்திக்கான் வானொலிக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து; இது வரை இந்த தேசிய பிரச்சினைக்கு தீர்வு ஏற்படவில்லை என்றும் யுத்தத்தில் தொடர்புடைய இருவரும் பல இழப்புகளைச் சந்தித்துள்ளனர் என்றும் இதனால் இருவரும் பாதிப்படைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

"இது சிவில் யுத்தம் மட்டும் அல்ல, எல்லாவற்றிக்கும் மேலாக இது கெரில்லா யுத்தம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் இது குறுகிய காலத்தில் முடியப் போவதில்லை, நீண்ட வரலாற்றைச் சந்திக்கும் யுத்தம். அரசாங்கம் பலவீனமான நிலையில் இருக்கும் இடத்தில் தீவிர வாதிகளின் கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பாதை ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு

## மனித உரிமைகள் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் வசிக்கும் மக்களுக்கு மாதுகாப்பான ஒரு பாதையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியதும், அங்குள்ள சாதாரண மக்களின் நலன்களைப் பேணவேண்டியதும் அரசாங்கத்தின் கடமை என கொழும்பிலுள்ள மனித உரிமைகள் குழு ஒன்று வற்புறுத்தியுள்ளது.

கடந்த மாதம் கிளாலி கடல் நீரேரியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட படுகொலைகள் குறித்து விசாரிக்க சுதந்திரமான குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் எனவும் அக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

சிறிலங்கா கடற்படை சட்ட விரோதமான முறையில் அப்பகுதியில் நடந்து கொண்டுள்ளது என அக்குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# புலிகள்குறித்த ராணுவத்தின் பிரசாரம் முற்றிலும் பொய்

## - பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ் குடா கடற்பகுதியில் கிளாலியூடான போக்குவரத்திற்கு பொதுமக்களை மனிதக் கேடயங்களாக விடுதலைப் புலிகள் பயன்படுத்துகிறார்கள் என்ற சிறிலங்கா இராணுவத்தினரின் கூற்று முற்றிலும் தவறான பொய்ப்பிரசாரம் என பி.பி.ஸி யின் லங்கைக்கான செய்தி முகவர் சுவக்கா நோஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளாலிப் பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்த அவர் இதுபற்றி விபரிக்கையில் கிளாலி கடற்பரப்பில் படகில் பயணம் செய்யும் மக்களை உண்மையில் விடுதலைப்புலிகள்தான் கடற்படையினரின் தாக்குதல்களில் இருந்து காப்பாற்றுகிறார்கள்.

இரவு நேரம் கரையோரத்தில் மக்கள் கூடுகிறார்கள். அவர்கள் பயணத்திற்காக புலிகள் கட்டணம் வசூலிக்கிறார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கில் பணம் வசூலிக்கிறார்கள் என இராணுவ அதிகாரிகள் கூறுகிறார்கள் ஆனால் அங்கு மக்கள் 150 ரூபா மட்டுமே கொடுத்துப் பயணம் செய்கிறார்கள்.

அங்கு மக்கள் தாம் பயணம் மேற்கொள்ள புலிகள் அனுமதிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தார்கள். படகுகள் பத்திரமாகப் போய் சேரும் என உறுதியாக தெரிந்தால அன்றி மக்களை படகில் செல்ல புலிகள் அனுமதிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதியில் வேறொரு அரசு நாளை அமைவது உறுதி!

## - ஜி. எம். பிரேமச்சந்திரா

(கொழும்பு)

"நாளை அல்லது நாளை மறுதினம் இந்த நாட்டின் வடபகுதியில் வேறொரு அரசாங்கம் உருவாகப் போவது உறுதி. அதனையாரும் தடுத்து நிறுத்த முடியாது" இவ்வாறு ஜனநாயக ஐக்கிய முன்னணியின் செயலாளர் ஜி எம் பிரேமச்சந்திர மருதானையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

"இந்த நிலையில் வடக்கு, கிழக்கு எல்லையில் ஒரு சர்வதேச விமான நிலையமும், திருக்கோணமலையில் இத்தாலியின் உதவியுடன் பாரிய வைத்தியசாலையும் அமைக்க அரசாங்கம் முயன்று வருவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; "யுத்தத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. மக்களைப் பட்டினி போட்டே இந்தப்பணம் பெறப்படுகின்றது, இவ்விடயத்தில் சிக்கித் தவிப்பது மக்களே."

"ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பலியிடப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனர்களாகியுள்ளனர் இராணுவ உயர்பீடம் அழிந்து போய்விட்டது."

"20 இலட்சம் இளைஞர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

உதவிஅரசாங்கஅதிபர் பிரிவு ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மீட்புநிதி சேகரிப்பு இன்று சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

மேலும் நாளை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை மீட்புநிதி சேகரிப்பு இடம்பெறவுள்ளதாகத் தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

# ஹெலி நோட்டம்

(வடமராட்சி)

மக்கள் நெருக்கமாகவுள்ள முனை, மாலிச்சந்தி நெல்லியடி, திக்கம் ஆகிய பகுதிகளை நேற்று சிறிலங்கா விமானப் படை உலங்குவானூர்தியொன்று பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டது. இச்சம்பவம் முற்பகல் 11மணியளவில் இடம்பெற்றது. (யோ)

# லொறி - சைக்கிள் மோதல் தாயும்மகனும் பரிதாபமரணம்

கண்டி வீதி வழியாக துவிச்சக்கரவண்டியில் வந்த தாயும் மகனும் லொறியுடன் மோதுண்டதில் பலியானார்கள்

நேற்றுக்காலை 10.00 மணியளவில் சங்கத்தானைச் சந்தியில் இடம்பெற்ற இவ்விபத்தில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த நா. முத்துப்பிள்ளை [வயது 46] அந்த இடத்திலேயேபலியானார். இவரது மகன் நா. திருக்குமாரன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்குஎடுத்துச் செல்லப்பட்டு நிலைமை மோசமடைந்தமையால் அங்கிருந்து அம்புலன்சில் யாழ் போதனா மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டார். அவருக்கு யாழ் மருத்துவமனையில் விசேட சிகிச்சைப்பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டபோதும் இவரும் மரணமடைந்தார். (86)

ழும் இணைந்து வெளியிடும் இறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ், மற்றும் சலனம், சுமைகளை, மூன்றில், ஆகவே, காலம், நந்தவனம் போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம், 405, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (4061)

## போத்தல்கள் தேவை

ஜம், பியர், சோடியல் போத்தல்கள் தொடர்ந்து எம்மால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. Tast Line Industries Pvt. Ltd 14, Seenior Lane, Jaffna. (சி6046)

## 200 நாடகங்கள்

OIL தமிழ்மொழி பாடத்திட்டத்தில் வானொலி நாடகமும் உள்ளது. இதைக் கற்றற்கு பயன்படக்கூடிய ஒரேயொரு நூல்—200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் மூதலாம்பிள்ளை 30/-. (4053)

## குழாய்க் கிணறுகள்

குறிக்கநோக்கத்திற்குகுழாய்க் கிணறுகளை தேர்ந்தோர் கொள்ளால் செய்து கொடுக்கப்படும் தொடர்புகளுக்கு கு. சுரேந்திரராஜ் வீரபத்திரர் கோவிலடி, பழைய றோட், கோப்பாய், கு. சுரேந்திரராஜ் மூத்த விநாயகர் வீதி, இல. 09 கச்சேரி நல்லூர் (4321)

## "பண்ணிசைப் போட்டிகள்"

வட்டுக்கோட்டைக் கொத்தணிப் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான "பண்ணிசைப் போட்டிகள்" இன்று காலை 8.30 மணியளவில் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை கனிஷ்ட பிரிவில் வட்டுக்கோட்டைக் கொத்தணி உப அதிபர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் [நகுலன்] தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு நா. தணிகாசலபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

வட்டுக்கோட்டைக் கொத்தணி அதிபர்கள் சங்கச்செயலாளர் திரு க. யோகானந்த சிவம் அதிபர், வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர் திருவி சிவஞானபோதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைப்பார்கள்.

## புத்தகங்கள் அன்பளிப்பு

யாழ். நகரப்பகுதியில் அமைந்திருக்கும் லெப்டினன்ட்குமரன் படிப்பகத்திற்கு வருகைதந்த கலாநிதி கனகராசா அவர்கள், இப்படிப்பகத்திற்காக ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்ததுடன், இப்பகுதியில் செய்கை பண்ணுவதற்காக கீரைவிதைகளையும், தென்னமரக் கன்றுகளையும் அன்பளிப்புச் செய்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தொழிலதிபர் கலாநிதி கனகராசா அவர்களுக்கு மேற்படி லெப்டினன்ட் குமரன் படிப்பகத்தில் வைத்து வழங்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தின் போதே மேற்படி பொருள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இப்பகுதி முகாம் பொறுப்பாளர் திரு. மதன் அவர்களும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில், இப்பகுதியில் மூலிகைத் தோட்டம் அமைக்கவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறிய கலாநிதி கனகராசா அவர்கள் இதற்கான உதவிகளைச் செய்து தருவதாக உறுதி கூறினார்.

## பவள விழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புனித பத்திரிசியார் கல்லூரி சாரணர் குழுவினால் அதனது 75ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா இன்று காலை 8.15 மணிக்கு கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆணையாளர் இ. மகேந்திரம் பிரதம விருந்தினராகவும் உதவி மாவட்ட ஆணையாளர்கள் இ. இராஜ்குமார், எஸ். தேவரஞ்சன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர்.

## "மத்திய வணிகம்" வெளியீடு

யாழ். மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தால் நாளை செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் மன்றத் தலைவர் க. பிரபாகரன் தலைமையில் "மத்திய வணிகம்" மலர்-இரண்டு வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

இதில் சிறப்பு விருந்தினராக திரு. எஸ். பத்மநாதன் (திட்டப் பணிப்பாளர் புனர்வாழ்வுப் பகுதி) கலந்து கொள்வார். இவ் விழாவில் கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் கலந்துகொள்ளுமாறு மன்றத்தின் செயலர் செல்வன் இ. ரேணுசங்கர் வேண்டிக்கொள்கின்றார்.

வனை தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டிருப்பதாக

பேரே வாக்களிக்கத் தகுதியுடையோராக இருந்தனர்.

## சர்வோதய வேலைகள் வவுனியாவில் இடைநிறுத்தம்

சர்வோதயம் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த வேலைகள் யாவும் பெப்ரவரி மாதத்துடன் இடைநிறுத்தப்படவுள்ளது இம்மாவட்டத்தில் செயற்பட்ட இவ் அமைப்பின் கிளைகள் யாவும் மூடப்பட்டதுடன் கடமையாற்றிய சுமார் நாற்பது ஊழியர்களும் தலைமையகத்தால் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு நிதி நெருக்கடிகள் இடம்பெற்றமையே காரணம் என்றும் மேலும் தெரிய வருகிறது.

அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சர்வோதய அமைப்பின் நடவடிக்கைகள் யாவும் மார்ச் மாத முடிவுடன் நிறுத்தப்பட இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## கஞ்சா கடத்தல்

தயாச்சட்டிகளில்கஞ்சாவை கடத்திச்சென்ற 17 வயது பள்ளிமாணவன் ஒருவன் கையும் மெய்யுமாக பொலிசாரிடம் மாட்டிக் கொண்டான்.

இச்சம்பவம் மாத்தளையில் இடம்பெற்றது. பொலிசாரினால் மேற்படி மாணவன் விசாரணை செய்யப்பட்ட போது அவன் கஞ்சாப் போதைக்கு அடிமையானவன் எனத் தெரியவந்தது.

## நீர்த் தேக்கங்களில் நீர்மட்டம் குறைகிறது

கடந்த மூன்று மாத காலமாக ஏற்பட்டுவரும் கடும் வெயில் காரணமாக மவுசாகெல்லை, காசல்ரீ, நோட்டன் பிரிஜ் ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தோட்டப்புறங்களிலும் வேலைசெய்யும் தொழிலாளர்களின் வேலை நாட்களும்வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளதால் தொழிலாளரின் சம்பளத்திலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இங்கு தொழில் புரியும் தொழிலாளர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

## பாராட்டு

கடந்த வருடம் இடம்பெற்ற இராணுவநடவடிக்கை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட பூநகரி ப. நோ. கூ. சங்கத்தில் குறிப்பிட்ட பொருள்களை மீட்டெடுப்பதில் உயிரையும் பொருட்படுத்தாது உழைத்த சங்கப் பணியாளர்களைப் பாராட்டும் வைபவம் சங்கத் தலைவர் திரு. கா. கார்த்திகேசு தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. க. பஞ்சலிங்கம் அவர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன் பொருள் மீட்புப்பணியில் ஈடுபட்ட சங்கப் பணியாளர்களுக்கு நற்சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார். கூட்டுறவு மாவட்ட உத்தியோகத்தர்ச. குமாரவேலு அவர்களும் கருத்துரை வழங்கினார்.

யாழ் இளங்கலைஞர் மண்டபத்தில்

கன்னி இசைக்கச்சேரி வழங்கும்

கம்பவாரிதி இ. ஜெயராஜ்,

திரு. கு. ரட்ணகுமார் இருவருக்கும்

இதய வாழ்த்து

இயல்தெரிந்த இருவரும் இன்று இங்கே

அயலிருந்து இசைமழை பொழிகிறீர்கள்

பெற்ற புகழுடன் இசைப் புகழும்

இணையட்டும்

வெற்றிபல அமையட்டும், வாழ்த்து

வழங்குகிறோம்.

வடமராட்சி கம்பன் கழகத்தினர்

22-2-1993 (3417)

## தொல்புரத்தில் மாவீரர் நினைவஞ்சலிக் கூட்டம்

(தொல்புரம்)

மாவிளாகத்தில் வீரச்சாவெய்திய மாவீரர்களை நினைவுகூரும் முகமாக நினைவஞ்சலிக்கூட்டம் தொல்புரத்தில் நடைபெறவுள்ளது

மேற்படி கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஏழுமணியளவில் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளதென சங்கானை வட்டப் பொறுப்பாளர் திரு மதி தெரிவித்துள்ளார்.

மேலும் இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர் எனவும். நிகழ்வின் இறுதியில் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளனவெனவும், மேலும் அவர் தெரிவித்தார்.

## நினைவு கூருகின்றோம்...
## 1993-02-22

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னாரத்திதில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப். சிறீநாத் (பிரான்சிஸ்பிள்ளை அன்ரன்பெனாட் தயாநிதி - பரப்பாங்கண்டல், உயிலங்குளம் - மன்னார்)

வினோத் (மாசிலாமணி குலாஸ் மைக்கல்குலாஸ் - வங்காலை - மன்னார்)

மலையகம் - தலவாக்கொல்லையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொலைப்பட்ட சென்-கூம்ஸ் தோட்டத் தொழிலாளியான தமிழ்ப்பெரு மகன்.

யாழ் கோட்டை முன்பாக சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்- பல்கலைக்கழக மாணவன்.

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி - பூநகரி, 4-ம்கட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

தபபி

1989ஆம் ஆண்டு யாழ் - கொண்டாவில் ரயில் நிலையப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையிலீடுபட்ட தேச விரோதக் குழுவினரால் அடித்துக் கொல்லப்பட்ட, மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழிளைஞன்.

யாழ் - நெல்லியடிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மருத்துவமனைக் காவலாளியான, தமிழ்ப்பெருமகன்.

1991ஆம் ஆண்டு யாழ்- கட்டுவன் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை வேவு பார்க்கச் செல்கையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

சங்கரி (மதுரசங்கி விமலநாதன் - திருக்கடலூர் - திருமலை)

லவநிதா (ரதிமலர் கார்த்திகேசு - கரம்பொன், நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை - யாழ்.)

இதே பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்குச் சூட்டில் வீரச்சாவெய்திய-

தர்சன் (ஆன்ரு ஜீவா - பெரியகடை, திருமலை)

கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சாவைத்தழுவிய

சுதாங்கனி (சுதா தில்லையம்பலம் - இல. 551, 7-ம் வட்டாரம், இராமநாதபுரம், வட்டக்கச்சி கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்,

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(3416)

# இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஒட்டாண்டியாகும் நிலை

(கொழும்பு)

அரசவங்கிகளான இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் கம்பெனிகளுக்கும், 'பெரிய மனிதர்'களுக்கும் கடனாக வழங்கிய மொத்தம் 6,000 000,000,000 ரூபாவைத் திரும்பவும் பெற முடியாமல் ஒட்டாண்டியாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன இது பெரும் குற்றமாகும். இதனால் சாதாரண மக்கள் வங்கிகளில் கடன் நன்மைகளைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

ஹெரவம்பத்தனையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது ஜனாதிபதி ஆர். பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசுகையில்;

வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுள்ள300 கம்பெனிகளும் மற்றும் தனிப்பட்டவர்களும் பெற்ற கடனைத் திருப்பித் தருகிறார்களில்லை பெற்ற பணத்தை அவர்கள் கடன்கொடுத்த வங்கிகளில் தமது தனிப்பட்ட கணக்குகளிலும்இட்டுள்ளார்கள். இப்படியாக இவர்கள் கொள்ளைஅடித்துச் சென்றதினால் அப்பாவி மக்கள்வறுமையில் சிக்கியுள்ளார்கள் என்றும்,

நான் இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்து பணத்தை செலுத்தாமல் நிலுவையில் உள்ளவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் படியும், கடனை மீளப் பெறும்படியும் பணித்துள்ளேன் என்றார்.

## யாழ். இந்து யாழ்ப்பாணக் கல்லூரி கிரிக்கெட் போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் 19 வயதுக்குட்பட்ட விறுவிறுப்பான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது இப்போட்டி யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் வியாழக்கிழமை 18-ம் திகதியும் வெள்ளிக்கிழமை 19ஆம் திகதியும் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 319 ஓட்டங்களை 5 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் அணித்தலைவர் ஆர். வரதன் மின்னல் வேகத்தில் 135 ஓட்டங்களை 75 நிமிடங்களில் (8 சிக்சர்களும் 18பவுண்டரிகளும்) பெற்று ஒரு சாதனையை நிலைநாட்டினார். இவர் 100 ஓட்டங்களை 48 பந்து வீச்சில் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவருடன் திருக்குமார் சிறப்பாக விளையாடி 100 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றமையும் பாராட்டுக்குரியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 239 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஞ்சேயன் 64 ஓட்டங்களை மிகவும் நிதானமாக விளையாடி ஆட்டமிழக்காமல் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து யாழ் இந்துக் கல்லூரி இரண்டாவது இன்னிங்சில் 167 ஓட்டங்களை 3 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்றது

இதில் ஆர் வரதன் சொற்ப நேரத்தில் 43 ஓட்டங்களைப் பெற்றார். இவருக்கு உதவியாக வ. சிறிகுமார் 62 ஓட்டங்களைப் பெற்றார், திருக்குமார் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப்பெற்றார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு 10நிமிடங்களும் 20 ஓவர்களும் 248 ஓட்டங்களைப் பெறுவதற்கு பணிக்கப்பட்டது ஆனால் அவர்கள் 4 விக்கட் நஷ்டத்திற்கு 66 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

(42)

# ராஜீவ்காந்தி கொலை வழக்கு; 1004சாட்சிகள்,24,000பக்ககுற்றச்சாட்டு

ராஜீவ்காந்தி கொலை வழக்கு மார்ச் 6-ம் திகதி முதல் பூந்தமல்லி விசேட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இவ்வழக்கில் 1004 சாட்சிகள் ஆஜர் செய்யப்பட இருப்பதுடன், 24,000 பக்கங்கள் கொண்டதாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமரான ராஜீவ்காந்தி சிறிபெரும்புதூரில் கொலையுண்டமை தொடர்பான வழக்கு விசாரணைக்கென சென்னைக்கு அருகே பூந்தமல்லி சிறைச்சாலை வளாகத்தில் பெரும் பொருட் செலவில் விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. கடந்த பதினேழாம் திகதி முதல் இந்த வழக்கு விசாரணை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் எதிர்வரும் மார்ச் ஆறாம் திகதி வரை இவ்வழக்கு விசாரணை ஒத்திப் போடப்பட்டு உள்ளது.

இந்த விசேட நீதிமன்றத்தில் இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இருபத்தாறு பேரும் விசேட நீதிபதி எஸ். எம் சித்திக் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர் அவர்களின் விபரம் வருமாறு;

நளினி [27], இன்னை சாந்தன் [27], முருகன் [22], சங்கர் [24], விஜயானந்தன்[41], சிவருபன் அல்லது சுரேஷ் குமார் [20], கனகசபாபதி [70], ஆதிரை [17], றொபர்ட் பயஸ் [25], ஜெயக்குமார் [23], சாந்தி [24], விஜயன் [26], செல்வலட்சுமி மாப்பா(25), பாஸ்கரன் (56), சண்முகவடிவேலு அல்லது தம்பி அண்ணா (46), ரவிச்சந்திரன் அல்லது ரவி (24), சுசீந்திரன் அல்லது மகேஷ் 21), பேரறிவாளன் அல்லது அறிவு (26, இரும்பொறை (29), பாக்கியநாதன் (25), பத்மா (50, சுபாசுந்தரம் (50), தனசேகரன் (49), ரங்கன் (24), விக்கி அல்லது விக்னேஷ்வரன் (27), ரவிசந்ரன் (47).

இவர்கள் உட்பட மொத்தம் 41 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது கைதிகள் தங்களுக்காக வாதிடுவதற்கு உரிய சட்டத்தரணியை நீதிமன்றத்திற்கு அறிவிக்க நீதிபதி மேலும் அவகாசம் அளித்துள்ளார். இந்த வழக்கில் முக்கியமாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் நளினி சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி யாரென்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை நளினி பிரபல சட்டத்தரணி ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டுள்ள போதிலும் அவர் ஆஜராக மறுத்துவிட்டார். இதனையடுத்து முருகனுக்காக ஆஜராக இருக்கும் சட்டத்தரணியை நீதிமன்றம் நளினி சார்பில் ஆஜராக சிபாரிசு செய்தபோதும் நளினி அதனை ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

சி. பி. ஐ தரப்பில் ஜேக்கப் டானியல் ராஜமாணிக்கம், பஞ்சாபகேசன், கோபிநாத், தினகரன் ஆகிய சட்டத்தரணிகள் ஆஜராகின்றனர். இதே வேளை கடந்த மூன்றாம் திகதியன்று விசேட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சில பெண் கைதிகள் பாதுகாப்புப் பொலிசார் தங்களிடம் முறைகேடாக நடக்க முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்கள். இதனை எழுத்துமூலமான புகாராகத் தரும்படி கேட்டுக் கொண்ட நீதிபதி சித்திக், குற்றப் பத்திரிகையின் முழுப்பகுதியையும் சந்தேக நபர்கள் இருபத்தியாறு பேருக்கும் வழங்கும்படி சி. பி. ஐ க்குப் பணிப்புரையும் விடுத்தார்.

இவ்வழக்கின் குற்றப் பத்திரிகை சுமார் இருபத்துநான்காயிரம் பக்கங்கள் கொண்டதாகும். இதில் சுமார் பதினையாயிரம் பக்கங்களே குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் சந்தேகநபர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் குற்றப் பத்திரிகையின் முழுப் பகுதியும் கொடுக்கப்பட்டவுடன் கைதிகள் சிலர் விடுதலை மனு தாக்கல் செய்யக் கூடும் என்றும் கூறப்படுகிறது

இதேவேளை பூந்தமல்லி விசேட நீதிமன்ற கட்டடத்தில் அடிக்கு ஒருவர் வீதம் பொலிசார் நிறுத்தப்பட்டுள்ளனர். ஆயுத பாணிகளான மத்திய ரிசேர்வ் பொலிசார் காவல் கடமையில் ஈடுபடும் அதேசமயம், கட்டடத்தின் மேற்பகுதியில் ஐந்து விசேட கூண்டுகள் அமைக்கப்பட்டு அதிலிருந்து விசேட தொலை நோக்கு கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. சந்தேகத்திற்கு இடமான வகையில் இப்பகுதியில் நடமாடும் எவரையும் சுடுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் தடா சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விசேட விதிவிளிப்படி, விசாரணை நடத்தும் தரப்பினர் விரும்பினால் விசேட நீதிமன்றத்தின் அனுமதியுடன் இந் நீதிமன்றப் பகுதி தடை செய்யப்பட்ட பகுதியாக கூட அறிவிக்கப்படலாம். விசேட கோர்ட் அமைந்துள்ள பகுதியில் குறிப்பிட்ட தூரத்திற்கு தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பதும், சி பி. ஐ யின் சட்டத்தரணிகள், மற்றும் கைதிகளின் சட்டத்தரணிகள் தவிர வேறுயாரும் இப்பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

## ஹெல உறுமய குழுவினர் இரட்டை வேடம் காட்டுகின்றனர்

- காலியில் எதிர்ப்பு

சுதந்திரக் கட்சிக்குள் இயங்கும் ஹெல உறுமய குழுவினர் இரட்டை வேடம் ஒன்றைப் பின்பற்றி வருவதாகக் கூறப்படுகிறது. இக்குழுவின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு காலி நகரசபை மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்ற போது எதிர்ப்பு சுலோகங்கள் எழுதிய அட்டைகளைத் தாங்கியபடி பலர் மண்டபத்திற்கு வெளியே காணப்பட்டனர்.

சந்தளம பகுதியில் ஹோட்டல் அமைக்கும் திட்டத்திற்கு ஹெல உறுமய குழுவினர் எதிர்ப்பு தெரிவிக்கும் அதே சமயம் ஹெல உறுமய குழுவின் தலைவர்களில் ஒருவருக்கு சொந்தமான ஹோட்டல் ஒன்றிற்கு வரும் உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் அங்குமென கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகக் கூறியே இந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## கலைஞர்களின் ஆற்றல் ஆவணமாகவேண்டும்

டிவகலாலா வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இந்த நிலையம் கலைநிகழ்ச்சிகளை நடாத்தும் ஓர் இட... வேண்டுகோள் விடுத்தார்.

அவர் அங்கு பேசும் பேசுகையில், ஏழைகளாக இருப்ப...

## இராணுவத் தீர்வு காணவே அரசு ஆவலாக உள்ளது

-லலித் அத்துலத் முதலி

[கொழும்பு]

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வே உகந்தது யுத்த மூலம் தீர்வு காண முடியுமென அரசாங்கம் நம்பினால் பொதுமக்களை பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பிவிட்டு யுத்தத்...

62ரூபா. மலை போல் உயர்ந்துள்ள வாழ்க்கை செலவை சமாளிக்க முடியாத நிலைமையில் மக்கள்வாடுகின்றனர்நாடு குட்டிச்சுவராக போனாலும் அரசாங்கத்துக்கு கவலை இல்லை அதன்வீண்செலவுக்கும் களியாட்ட விழாக்களுக்கும் குறைவில்லை என்றார்.

## தேர்தல் கூட்டணி அமைக்க தமிழ்க் குழுக்கள் முயற்சி

மாகாண சபைத் தேர்தலில் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் முயற்சி மேற்கொண்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்த வருடம் நடுப்பகுதியில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டணி அமைப்பதில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

## தடுப்பு முகாம்களில் 3000 பேர் இன்னும் தடுத்து வைப்பு

சிறிலங்கா அரசினால் நாட்டில் உள்ள பல்வேறு தடுப்பு முகாம்களில் சுமார் 3 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் செயற்குழுத் தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் ஜே எப். சூஸா தெரிவித்தார்.

மேலும் மனித உரிமைகள் செயற்குழுவும் மேற்படி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்காக வழக்குத் தொடர்ந்து அநேகமானவர்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## வடபகுதிக்கு மருந்து பொருள்கள் அனுப்புவதில் அரசு அக்கறையீனம்

(கொழும்பு)

வேத மூலிகைகள், வேர்க...

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிகளுமிடையில் 19 வயதுக்குட்பட்ட விறுவிறுப்பான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இப்போட்டி யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் வியாழக்கிழமை 18-ம் திகதியும் வெள்ளிக்கிழமை 19ஆம் திகதியும் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 319 ஓட்டங்களை 5 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் அணித்தலைவர் ஆர். வரதன் மின்னல் வேகத்தில் 135 ஓட்டங்களை 75 நிமிடங்களில் (8 சிச்சர்களும் 18 பவுண்டரிகளும்) பெற்று ஒரு சாதனையை நிலைநாட்டினார். இவர் 100 ஓட்டங்களை 48 பந்து வீச்சில் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவருடன் திருக்குமார் சிறப்பாக விளையாடி 100 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 239 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஞ்செயன் 64 ஓட்டங்களை மிகவும் நிதானமாக விளையாடி ஆட்டமிழக்காமல் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து யாழ் இந்துக் கல்லூரி இரண்டாவது இன்னிங்சில் 167 ஓட்டங்களை 3 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்றது.

இதில் ஆர் வரதன் சொற்ப நேரத்தில் 43 ஓட்டங்களைப் பெற்றார். இவருக்கு உதவியாக வ. சிறிகுமார் 62 ஓட்டங்களைப் பெற்றார். திருக்குமார் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப்பெற்றார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு 10 நிமிடங்களும் 20 ஓவர்களும் 248 ஓட்டங்களைப் பெறுவதற்கு பணிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் 4 விக்கட் நஷ்டத்திற்கு 66 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். (42)

முதல் இந்த வழக்கு விசாரணை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் எதிர்வரும் மார்ச் ஆறாம் திகதி வரை இவ்வழக்கு விசாரணை ஒத்திப் போடப்பட்டு உள்ளது.

இந்த விசேட நீதிமன்றத்தில் இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இருபத்தாறு பேரும் விசேட நீதி தி எஸ். எம் சித்திக் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர் அவர்களின் விபரம் வருமாறு;

பதிவு செய்யப்பட்டிருக்கிறது கைதிகள் தங்களுக்காக வாதிடுவதற்கு உரிய சட்டத்தரணியை நீதிமன்றத்திற்கு அறிவிக்க நீதிபதி மேலும் அவகாசம் அளித்துள்ளார். இந்த வழக்கில் முக்கியமாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் நவினி சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி யாரென்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை நவினி பிரபல சட்டத்தரணி ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டுள்ள போதிலும் அவர் ஆஜராக மறுத்து

தேக நபர்கள் இருபத்தியாறு பேருக்கும் வழங்கும்படி சி. பி. ஐ க்குப் பணிப்புரையும் விடுத்தார்.

இவ்வழக்கின் குற்றப் பத்திரிகை சுமார் இருபத்துநான்காயிரம் பக்கங்களை கொண்டதாகும். இதில் சுமார் பதினையாயிரம் பக்கங்களே குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் சந்தேகநபர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் குற்றப் பத்திரிகையின் முழுப் பகுதியும் கொடுக்கப்பட்ட

நடத்தும் தரப்பினர் விரும்பினால் விசேட நீதிமன்றத்தில் அனுமதியுடன் இந் நீதிமன்றப் பகுதி தடை செய்யப்பட்ட பகுதியாக கூட அறிவிக்கப்படலாம். விசேட கோர்ட் அமைந்துள்ள பகுதியில் குறிப்பிட்ட தூரத்திற்கு தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பதும், சி. பி. ஐ யின் சட்டத்தரணிகள், மற்றும் கைதிகளின் சட்டத்தரணிகள் தவிர வேறுயாரும் இப்பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

# இராணுவத் தீர்வு காணவே அரசு ஆவலாக உள்ளது

## -லலித் அத்துலத் முதலி

[கொழும்பு]

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வை உதறிவிட்டு யுத்த மூலம் தீர்வு காண முடியுமென அரசாங்கம் நம்பினால் பொதுமக்களை பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி விட்டு யுத்தத்தைத் தொடரட்டும் இன்றைய யுத்தத்தினால் அப்பாவி பொதுமக்களும் இராணுவத்தினருமே உயிரிழக்கின்றனர் என லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நான் வர்த்தக கப்பற்றுறை அமைச்சராக இருந்த போது குழந்தைகளின் பால்மா விலை ரூபா 12.50 ஆக இருந்தது இன்று அதன்விலை 62 ரூபா. மலை போல் உயர்ந்துள்ள வாழ்க்கை செலவை சமாளிக்க முடியாத நிலைமையில் மக்கள் வாடுகின்றனர் நாடு குட்டிச்சுவராக போனாலும் அரசாங்கத்துக்கு கவலை இல்லை ஆடம்பர செலவுகளுக்கும் களியாட்ட விழாக்களுக்கும் குறைவில்லை என்றார்

காமினி திசாநாயக்கா பேசுகையில் இன்று பத்திரிகைச் சுதந்திரமில்லை. பத்திரிகையாளர்கள் தாக்கப்படுகின்றார்கள் சுதந்திரமாக எழுதக்கூடிய வாய்ப்பு பத்திரிகையாளர்களுக்கு இல்லை ஐ தே க உள்ளூராட்சி மோசடிகள் ஏற்பட்டு வருகின்றன இதை மூடி மறைக்க சில பத்திரிகைகள் பயன்படுத்தப்படுகின்றன என்றார்.

# பட்டப்பகலில் வீடுடைப்பு

## பாவனைப்பொருள்கள் கொள்ளை

பட்டப்பகலில் வீட்டு உரிமையாளர்கள் மரணவீடொன்றிற்குச் சென்றபோது வீடு உடைக்கப்பட்டு உடுபுடைவைகள், பாவனைப் பொருள்கள் உட்பட பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

தும்பளை நீளவலவைச் சேர்ந்த ச ஆனந்த நடராஜா என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது. உறவினர் ஒருவரின் மரணவீடொன்றுக்கு சென்ற சமயம்பார்த்துவீட்டை உடைத்துக்கொண்ட கொள்ளைக் கோஷ்டியே இவ் வீட்டிலிருந்து உடுபுடைவைகள், கமரா உட்பட சுமார் 50,000 ரூபா பெறுமதியான பாவனைப் பொருள்களைக் கொள்ளையடித்துள்ளது. இக் கொள்ளை தொடர்பாக தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வீம ஏகாதசித் திருவிழா

சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீ வலலிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 4-ம் திகதி வீமஏகாதசித் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்றைய தினம் ஆலயத்தில் விசேட பூசைகளும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

# ஹெல உறுமய குழுவினர் இரட்டை வேடம் காட்டுகின்றனர்

## - காலியில் எதிர்ப்பு

சுதந்திரக் கட்சிக்குள் இயங்கும் ஹெல உறுமய குழுவினர் இரட்டை வேடம் ஒன்றைப் பின்பற்றி வருவதாகக் கூறப்படுகிறது. இக்குழுவின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு காலி நகர சபை மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது எதிர்ப்பு சுலோகங்கள் எழுதிய அட்டைகளைத் தாங்கியபடி பலர் மண்டபத்திற்கு வெளியே காணப்பட்டனர்.

சந்தனம பகுதியில் ஹோட்டல் அமைக்கும் திட்டத்திற்கு ஹெல உறுமய குழுவினர் எதிர்ப்பு தெரிவிக்கும் அதே சமயம் ஹெல உறுமய குழுவின் தலைவர்களில் ஒருவருக்கு சொந்தமான ஹோட்டல் ஒன்றிற்கு வரும் உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் அங்குமன இராமத்தைச் சேர்ந்த மீனவர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகக் கூறியே இந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# கலைஞர்களின் ஆற்றல் ஆவணமாகவேண்டும்

## டிவகலாலா வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

இந்த நிலையம் கலைநிகழ்ச்சினை நடாத்தும் ஓர் இடமாக மட்டும் நில்லாமல் இந்த மண்ணிலே வாழ்ந்த வாழ்கின்ற கலைஞர்களின் விபரங்களையும், அவர்களது கலை ஆற்றலையும், ஆவணப்படுத்தும் ஒரு நிலையமாகவும் இருக்கவேண்டும் என்று இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா வேண்டுகோள் விடுத்தார்.

அவர் அங்கு பேசும் பேசுகையில், ஏழைகளாக இருப்பதால் தாம் விரும்பும் கலையை பயிலவோ அதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவோ முடியாத கலை ஆர்வமுள்ள இளைஞர்கள் இலவசமாகப் பயில்வதற்கும் இந்த நிலையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிலையத்தில் இனமும் நாத ஒலி எழும்ப வேண்டும். சலங்கையின் சப்தம் கேட்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# சார்க் மாநாடு ஏப்ரலில் நடத்த யோசனை

(கொழும்பு)

தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பான 'சார்க்' இன் அடுத்த உச்சிமாநாட்டை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடாத்தலாம் என்று இலங்கை யோசனை கூறியுள்ளது.

இதுபற்றி அண்மையில் டில்லி சென்ற சிறிலங்காத் தூதுவர் பெர்னாட் திலகரத்தினா இந்திய வெளியுறவுச் செயலர் ஜே என். டிக்ஷிற்றுடன் பேச்சு நடத்தியிருப்பதாகவும், இந்தியாவின் வசதிக்கேற்ப திகதிகள் தீர்மானிக்கப் படலாம் என்றும் கூறப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது இந்திய மீனவர்கள் பாக்கு நீரிணையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், இந்திய குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மாவின் உத்தேச இலங்கை விஜயம் குறித்தும் ஆராயப்பட்டதாகவும் மேலும் தெரியவருகின்றது.

# விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். சாவகச்சேரி இந்து விக்கினேஸ்வரா கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி 1993 மேற்படி பாடசாலை மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

# தேர்தல் கூட்டணி அமைக்க தமிழ்க் குழுக்கள் முயற்சி

மாகாண சபைத் தேர்தலில் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் முயற்சி மேற்கொண்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்த வருடம் நடுப்பகுதியில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டணி அமைப்பதில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

# தடுப்பு முகாம்களில் 3000 பேர் இன்னும் தடுத்து வைப்பு

சிறிலங்கா அரசினால் நாட்டில் உள்ள பல்வேறு தடுப்பு முகாம்களில் சுமார் 3 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் செயற்குழுத் தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் ஜே எப். சூஸா தெரிவித்தார்.

மேலும் மனித உரிமைகள் செயற்குழுவும் மேற்படி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்காக வழக்குத் தொடர்ந்து அநேகமானவர்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# வடபகுதிக்கு மருந்து பொருள்கள் அனுப்புவதில் அரசு அக்கறையீனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் இந்தியாவின் பகுதியல்ல அதுவும் இலங்கையின் ஒரு பகுதியே. அங்குள்ள வைத்தியசாலைகளுக்கு போதிய மருந்துப் பொருள்களை அரசாங்கம் அனுப்புவதாக இல்லை போர் நடைபெறும் பகுதிகளில்தான் மக்கள் பெரும்பாலும் பாதிக்கப்படுவார்கள். அப்பகுதிகளுக்குத்தான் கூடுதலான மருந்துப் பொருள்கள் அனுப்பப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் அரசு எதிர்மாறாக செயற்படுகின்றது. இவ்வாறு யாழ். மாவட்ட எம். பி. ஒருவர் சென்றவியாழன் அன்று பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் போசாக்கின்மை காரணமாக வடக்கில் பலர் குறிப்பாக சிறுவர்கள் நோயாளிகளாகின்றனர். சாதாரணமாக மருந்துகள் மூலம் சுகப்படுத்தக் கூடிய மலேரியா போன்ற நோய்கள் காரணமாக வடக்கில் பலர் மடிந்துபோகின்றனர். மருந்து மேற்படி பகுதிக்கு அனுப்பப்படாமையே காரணமாகும்.

வவுனியாவிற்கு அப்பால் ஒரு பனடோல் பக்கெட்டைக் கூட கொண்டுசெல்ல கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதிப்பதாக இல்லை. ஆயுர்வேத மூலிகைகள், வேர்களைக்கூட கொண்டு செல்ல கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுக்கிறது. பாம்புக் கடியினால் பாதிக்கப்பட்டவர்களைக் குணப்படுத்த பத்து வேர்வகைகள் அவசியமானவை, அவற்றையும் தடுத்தால் எப்படி? அந்த வேர்களில் என்ன வெடிகுண்டா செய்யமுடியும்? இது சம்பந்தமான விடயத்தில் அரசாங்கம் மனிதாபிமானத்துடன் செயற்படவேண்டும். நோயாளிகள் சுகமடைய உதவ வேண்டிய அரசாங்கம் இப்போது வடக்கில் நோயாளிகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

# கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் ''அரசியல் தொடர் பாடல்'' என்ற கருத்தரங்கு இன்று பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் பேராசிரியர் ந பாலகிருஷ்ணன் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, கலாநிதி எஸ். கே. எஸ். நாதன் ஆகியோர் உரை நிகழ்த்துகின்றனர்.

## இடம்பெயர்ந்தோருக்கு கைதடியில் குடிசைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் கைதடி ரயர் தொழிற்சாலையில் 30 தற்காலிகக் குடிசைகள் அமைக்கப்பட்டு வலி-மேற்கு இளவாலை, மாதகல் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சுகாதார வசதிகளும் உடுபுடைவைகளும் கல்விக்கான ஏற்பாடுகளும், சுயதொழில் வாய்ப்புக்கான வசதிகளையும் இச் செஞ்சிலுவைச்சங்கமே மேற்கொண்டு வருகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது இடம்பெயர்ந்தோர் முகாம்களை செஞ்சிலுவைச்சங்கத்தினர் அமைத்துக் கொடுத்தபின் அதனை ஏனைய சமூகநல அமைப்புக்களே பொறுப்பேற்று நடத்துகின்றன. குடிசைகளை அமைத்துக் கொடுப்பதற்கு தேவையான பொருளாதார உதவியே செஞ்சிலுவைச்சங்கத்திற்கு இடைப்பதாகவும் அம்முகாமை தொடர்ந்து பராமரிக்கும் பொறுப்பை ஏனைய சமூகநல அமைப்பே இதுவரை பொறுப்பேற்று நடாத்தி வருகின்றன என்றும் ஆனால் இம்முகாமை ஏனைய அமைப்புக்கள் பொறுப்பேற்க முன்வராததால் பராமரிக்கும் பொறுப்பையும் செஞ்சிலுவைச் சங்கமே பலசிரமத்தின் மத்தியில் செய்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வெண்கட்டி தட்டுப்பாடு

(சுன்னாகம்)

யாழ். மாவட்டத்தில் வெண்கட்டியின் தட்டுப்பாடு காரணமாக பாடசாலைகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றன. இதனால் கல்வி கற்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் முழுமையான கற்றலை பெறமுடியாதுள்ளது. இது குறித்து யாழ். கல்வித் திணைக்களம் கருத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாடசாலை அதிபர்கள் எதிர்பார்க்கிறார்கள். (09)

## இலட்சார்ச்சனை

(கொழும்புத்துறை)

நர்தாவில் அருள்மிகு ஸ்ரீ முன்னீஸ்வரர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஒரு மாதகாலம் நடைபெறும்.

இலட்சார்ச்சனை முடிவு அடுத்தமாதம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூர்த்தியாகும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (24)

## பாடசாலைசேவை

(வடமராட்சி)

சிற்றூர்தி சேவைச்சங்கம் குஞ்சர் கடையில் இருந்து பாடசாலை பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மற்றும் எரிபொருள் விலை யேற்றத்தினால் இச் சங்கம் பஸ் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. யாழ்ப்பாணம்—பருத்தித்துறைக்கான ஒரு வழிக் கட்டணமாக 40 ரூபா அறவிடப்படுகிறது. (யோ)

## வயிற்றோட்டத்திற்கு குழந்தை பலி

(கொடிகாமம்)

வயிற்றோட்டம் நோய் காரணமாக நேற்று முன்தினம் குழந்தை ஒன்று மரணமான சம்பவம் கெற்பலி பண்டிதர் குடியிருப்பு முகாமில் இடம் பெற்றது.

வி. சுதாகன் (வயது 02) என்ற குழந்தையே இவ்வாறு மரணமானவராவர். (86)

## வீடமைப்பு மானியம் வழங்கப்படவுள்ளது

(தொல்புரம்)

வீடமைப்புத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 15 லட்சம் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் மானியம் வழங்கல் நடைபெறவுள்ளது.

மேற்படி மானிய வீடமைப்புத்திட்டம் வலி-மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் இலங்கும் சனசமூக நிலையங்களினூடாக, வறுமையிலும் வறுமையான குடும்பங்களுக்கு வீடமைக்கும் பொருட்டு ...

தென் ஆபிரிக்காவில்

# அமைச்சரவையில் மாற்றம் கறுப்பர்கள் முதல்முறையாக சேர்ப்பு

[ஜோகனஸ்பேர்க்]

தென் ஆபிரிக்காவில் வெள்ளையர் அல்லாத அரசியல்வாதிகள் இருவர் அமைச்சரவை அங்கத்தவர்களாக எவ். டி. கிளார்க்கினால் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

ஏர்ல் வில்லியம்ஸ், ஜாக் ரஜி ஆகிய இருவருக்கும் முறையே விளையாட்டு மக்கள் துறை அபிவிருத்தி அமைச்சுக்கள் வழங்கப்பட்டு இருப்பதோடு, இந்திய வம்சாவளியினரான வழக்குரைஞர் பரிதி ரஞ்சனுக்கு சுற்றுலாத் துறை விருத்தி அமைச்சு வழங்கப்பட்டு உள்ளது. உத்தேசபல்லின அடிப்படையிலான ஜனநாயகத் தேர்தலை சந்திக்கும் ஒரு முயற்சியாகவே ஆளும் கட்சியைச் சேர்ந்த வெள்ளையர் அல்லாதோருக்கு அமைச்சு பொறுப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ஸ்ராலின் பாலர் பாடசாலை திறப்பு

(பருத்தித்துறை)

புலோலி தெற்கு வல்லிவத்தைக் கிராமத்தில் கிராம அபிவிருத்தி இணைக்களம் புதிய பாலர் பாடசாலை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. இப்பாலர் பாடசாலைத் திறப்பு விழாவை பருத்தித்துறை வட்டவை உதவிப் பொறுப்பாளர் திரு. எழில் தமிழீழத் தேசியக் கொடியான புலிக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். வடமராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன் மங்களவிளக்கேற்றி பாலர் பாடசாலை யைத் திறந்து வைத்தார். கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு எஸ் கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு கிராம அபிவிருத்தி அதிகாரி செல்வி நவமணி கந்தையா பாலர் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார். பருத்தித்துறை வட்டவைப் பொறுப்பாளர் திரு வைத்தமிழன் இப்பாலர் பாடசாலைக்கு "ஸ்ராலின் பாலர் பாடசாலை" எனப் பெயர் சூட்டி வைத்தார். [25]

## நிவாரண உதவி

புனித யாகப்பர் ஆலய பங்கில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு உலர் - உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது.

## நிர்வாகிகள் தெரிவு

புன்னாலைக்கட்டுவன் மேற்கு 'மனோன்மணி' கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் யாழ். யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் கிராம சேவை அலுவலர் திரு. இ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. ஐ சண்முகநாதன் (அதிபர்). உப தலைவர் திரு. சு ...

## விமானக் கடத்தல்காரர் அதிகாரிகளிடம் சரணடைந்தார்

ரஷ்ய விமானம் ஒன்றைக் கடத்திச் சென்ற நபர் ஒருவர் ஸ்டாக்ஹோம் விமான நிலையத்தில் சுவீடன் அதிகாரிகளிடம் நேற்று முன்தினம் சரண் அடைந்தார். இவர் சரணடைவதற்கு முன்பாக பல மணிநேரப் பேச்சுகள் இடம்பெற்றது. சைபீரியாவிலிருந்து சென் பீட்டர்ஸ்பேர்க் நோக்கி சென்று கொண்டிருந்த இவ் விமானம் சுமார் எழுபது பயணிகளுடன் கடத்தப்பட்டது தெரிந்ததே. இவ் விமானத்தை அமெரிக்கா நோக்கிச் செலுத்துமாறு கட்டளையிட்ட கடத்தல்காரர் பயணிகள் எவருக்கும் எந்த விதத்திலும் ஊறு விளைவிக்கவில்லை என்றும், அனைவரும் பத்திரமாக விடுவிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. எனினும் கடத்தல்காரர் பின்னர் ஸ்டாக்ஹோம் அதிகாரிகளிடம் சரண் அடைந்தார்.

## பாராளு. உறுப்பினர்களுடன ஜெயலலிதா ஆலோசனை

மத்திய அரசுடனும், காங்கிரஸ் கட்சியுடனும் தமது கட்சி கொண்டுள்ள உறவு பற்றி அ. இ. அ. தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை நடத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக சென்னையில் நடைபெற்ற இக் கலந்தாலோசனையின் போது எதிர்வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நிலைப்பாடு பற்றியும் ஆராயப்பட்டதாக மேலும் கூறப்பட்டுள்ளது.

## அ. தி. மு. க. பாரதீய ஜனதா அடுத்த தேர்தலில் கூட்டு?

தமிழ் நாட்டில் அடுத்த பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகத்துக்கும் இடையே கூட்டணி ஏற்பட்டால் இந்திரா காங்கிரஸ் திராவிட முன்னேற்றக் கழகம் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி ஆகியன ஒன்று சேர்ந்து அதை எதிர்த்து முறியடிக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர்களில் ஒருவரான வி. கிருஷ்ணமூர்த்தி கூறியிருக்கிறார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளரின் கேள்விக்குப்பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

## வைகை கடுகதி ரயில் முன் மறியல் செய்ய முயற்சி

[சென்னை]

நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அரிசி சீனி ...

... பட 176 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

நால்குடியிலும் இதே புகை...

---

## இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா

இலங்கை வங்கியின் இரண்டாம் கிளையின் ஆதரவில்

### 14ஆம் நாள் நிகழ்ச்சிகள்

### 22- 2 - 93 (திங்கள்) இன்று

### இடம்: மன்றக் கலாமண்டபம்

மாலை 4.00 — 5.00 மங்கள இசை:

நாதஸ்வரம் ; என். ஆர். கே. ரத்தினகுமார்
என். ஆர் கே. வாகீஸ்வரன்
தவில் : என். முருகானந்தம்
கே. வரதன்

5.00 — 5.15 வீணை

நாகேந்திரா, அரவிந்தன், தயாளி நாகேந்திரா
மிருதங்கம் ; ரி. திருக்குமரன்

5.15 — 5.30 வயலினிசை

க. கேஷசக்தியா, பா. ஷர்மிளா, சி கலாரஜனி,
தி. திருமகள் க. ஸுவர்ணாங்கி அ. ரோகிணி
மிருதங்கம் : பி. ரதிருபன்

5 30—6.00 பாட்டு:

இ ஜெயராஜ் கு ரத்னகுமார்
வயலின் ; ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம் : கே. கண்ணதாஸன்

6 00 —6.45 பாட்டு : மிதிலா விவேகானந்தன்

வயலின் : எஸ். சரிவேஸ்வரசர்மா
மிருதங்கம் ; கே. கண்ணதாஸன்
கஞ்சிரா : எஸ். நாகராஜன்

6.45 — 7 00 மங்கள விளக்கேற்றல்

திரு. எம். கிரீதரன் (விமாசி)

## 14ஆம் நாள் நிகழ்ச்சிகள்
## 22-2-93 (திங்கள்) இன்று
### இடம்: மன்றக் கலாமண்டபம்

மாலை 4.00 — 5.00 மங்கள இசை:
நாதஸ்வரம்; என். ஆர். கே. ரத்தினகுமார்
என். ஆர். கே. வாகீஸ்வரன்
தவில்: எஸ். முருகானந்தம்
கே. வரதன்

5.00 — 5.15 வீணை
நாகேந்திரா, அரவிந்தன், தயாளி நாகேந்திரா
மிருதங்கம்: ரி. திருக்குமரன்

5.15 — 5.30 வயலினிசை
க. கௌசல்யா, பா. ஷர்மிளா, சி. சுகாரஜனி,
தி. திருமகள், க. ஸுவர்ணாங்கி அ. ரோஜினி
மிருதங்கம்: பி. ரதிருபன்

5.30—6.00 பாட்டு:
இ ஜெயராஜ் கு ரதீனகுமார்
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்

6.00—6.45 பாட்டு: மிதிலா விவேகானந்தன்
வயலின்: எஸ். சிவேஸ்வரசர்மா
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்
கஞ்சிரா: எஸ். நாகராஜன்

6.45 — 7.00 மங்கள விளக்கேற்றல்
திரு. எம். இந்திரன் (விமாகி)
திரு. செல்வம்(நெடுங்கேணி
திரு. கா. கனகசிங்கம் (அம்பாள் புடவையகம்)
திரு. கை. சற்குணம் சிற்றின்ப)
தலைவர்: கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை
சிறப்பு விருந்தினர்: திரு. எஸ். ஐயம்பெருமாள் [முகாமையாளர் இலங்கைவங்கி 2-ம் கிளை]

7.00 — 8.00 இசைக்கச்சேரி
பாட்டு: எஸ். திலகநாயகம்போல்
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்
கடம்: சதா வேலமாறன்

8.00—8.45 கதகளி நாட்டியம்
வேல் ஆனந்தன் நடன அமைப்பு

8.45 — 10.00 நாதஸ்வரஇசை
நாதஸ்வரம்: எம். எஸ். சண்முகநாதன்
எஸ் ரமணன்
தவில்: என். ஆர். எஸ். சுதாகரன்
கே. குகானந்தன்

வாழ்த்துவோர்:
**ரூபன் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி
(சி-5965)

(வடமராட்சி)

சிற்றூர்தி சேவைச்சங்கம் குஞ்சர் கடையில் இருந்து பாடசாலை பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மற்றும் எரிபொருள் விலை ஏற்றத்தினால் இச் சங்கம் பஸ் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. யாழ்ப்பாணம்— பருத்தித்துறைக்கான ஒரு வழிக் கட்டணமாக 40 ரூபா அறவிடப்படுகிறது. (யோ)

### வயிற்றோட்டத்திற்கு குழந்தை பலி

(கொடிகாமம்)

வயிற்றோட்டம் நோய் காரணமாக நேற்று முன்தினம் குழந்தை ஒன்று மரணமான சம்பவம் கெற்பலி பண்டிதர் குடியிருப்பு முகாமில் இடம் பெற்றது.

வி. சதாதன் (வயது 02) என்ற குழந்தையே இவ்வாறு மரணமானவராவர். (86)

### வீடமைப்பு மானியம் வழங்கப்படவுள்ளது

(தொல்புரம்)

வீடமைப்புத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 15 லட்சம் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் மானியம் வழங்கல் நடைபெறவுள்ளது.

மேற்படி மானிய வீடமைப்புத்திட்டம் வலி-மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் இயங்கும் சனசமூக நிலையங்களினூடாக, வறுமையிலும் வறுமையான குடும்பங்களுக்கு வீடமைக்கும் பொருட்டு நிவாரணமாக வழங்கப்படவுள்ளது.

மேலும் இந்நிவாரணக் கொடுப்பனவுகள் அண்மையில் ஆரம்பிக்கப்படவுள்ளதென பிரதேச செயலர் அலுவலகத்திலிருந்து அறியப்படுகின்றது.

### ஐந்துமாதம் சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிராந்தியக் கூட்டுறவுக் கல்லூரிச் சகல ஊழியர்களுக்கும் கடந்த ஐந்து மாதங்களாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என ஊழியர்கள் ஆழ்ந்த கவலையும், மனவேதனையும் அடைந்துள்ளனர்.

இக்கல்லூரி உயரதிகாரி கொழும்பில் செயல்பட்டு வரும் தலைமைச் செயலகத்துடன் பல தடவைகள் கடித மூலமும், நேரிலும் தொடர்புகள் கொண்டும், சம்பளம் பெற முயற்சி செய்தும் இன்றுவரை கடந்த ஐந்து மாதங்களாக ஒருவித வேதனமும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என இக்கல்லூரி ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள் எனத் தெரியவந்துள்ளது (24.

மணிப்பாளர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன் மங்களவிளக்கேற்றி பாலர் பாடசாலையைத் திறந்து வைத்தார். இராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு எஸ் கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு இராம அபிவிருத்தி அதிகாரி செல்வி நவமணி கந்தையா பாலர் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார். பருத்தித்துறை வட்டாரப் பொறுப்பாளர் திரு வைத்தமிழன் இப்பாலர் பாடசாலைக்கு "ஸ்ராலின் பாலர் பாடசாலை" எனப் பெயர் சூட்டி வைத்தார். [25]

### நிவாரண உதவி

புனித யாகப்பர் ஆலய பங்கில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு உலர்-உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது

### நிர்வாகிகள் தெரிவு

புன்னாலைக்கட்டுவன் மேற்கு 'மனோன்மணி' இராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களின் கூட்டம் அண்மையில் யாழ். யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் இராம சேவை அலுவலர் திரு. இ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. ஐ சண்முகநாதன் (அதிபர்). உப தலைவர் திரு. சு இருநாவுக்கரசு, செயலாளர் திரு. க. குலேந்திரன், உப செயலாளர் திரு தி கோபால சாமி, பொருளாளர் திரு.செ. நல்லதம்பி ஆகியோருடன் ஏழு பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. [22]

★

கொக்குவில் இளைஞர்சங்கத்தின் மனோன்மணி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் நடப்பு வருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி தெரிவில் தலைவராக அ இராசையா, செயலாளராக ஆ. இராசகுமார், பொருளாளர் கு. சண்முகநாதன், உப தலைவராக ம. தெய்வேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

★

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாச வருடாந்தப் பொதுக்கூட்டம் வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெற்ற போது தலைவராக திரு. க வேலாயுதபிள்ளையும், செயலாளராக திரு. கொ. குணசிங்கமும், பொருளாளராக திரு ம மகிழ்ராஜனும், பத்திராதிபராக திரு. த குருபிரசாதமும் தெரிவு செய்யப்பட்டனர். (25)

விமானம் சுமார் எழுபது பயணிகளுடன் கடத்தப்பட்டது ஸ்டாக்ஹோம் அதிகாரிகளிடம் சரண் அடைந்தார்.

## பாராளு. உறுப்பினர்களுடன் ஜெயலலிதா ஆலோசனை

மத்திய அரசுடனும், காங்கிரஸ் கட்சியுடனும் தமது கட்சி கொண்டுள்ள உறவு பற்றி அ இ அ தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் வைத்தாலோசனை நடத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக சென்னையில் நடைபெற்ற இக்கலந்தாலோசனையின் போது எதிர்வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் அ. இ. அ. தி மு க. உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நிலைப்பாடு பற்றியும் ஆராயப்பட்டதாக மேலும் கூறப்பட்டுள்ளது.

## அ. தி. மு. க. பாரதீய ஜனதா அடுத்த தேர்தலில் கூட்டு?

தமிழ் நாட்டில் அடுத்த பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாக்கட்சிக்கும் அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகத்துக்குமிடையே கூட்டணி ஏற்பட்டால் இந்திரா காங்கிரஸ் திராவிட முன்னேற்றக் கழகம் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி ஆகியன ஒன்று சேர்ந்து அதை எதிர்த்து முறியடிக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர்களில் ஒருவரான வி. கிருஷ்ணமூர்த்தி கூறியிருக்கிறார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளரின் கேள்விக்குப்பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

## வைகை கடுகதி ரயில் முன் மறியல் செய்ய முயற்சி

(சென்னை)

நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அரிசி சீனி விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளதை எதிர்த்து நேற்று முன்தினம் திருச்சி அருகே உத்தமர் கோயில் புகையிரத நிலையத்தில் வைகை கடுகதி புகையிரதம் முன்னே மறியல் செய்ய முயன்ற அனைத்து இந்திய அண்ணா தி மு.கழக சட்டமன்ற உறுப்பினர் உட்பட 176 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

லால்குடியிலும் இதே புகையிரதத்தை மறிக்க முயன்ற அதே கட்சியின் தொண்டர்கள் 86 பேர் கைது செய்யப்பட்டார்கள் நெய்வேலி புகையிரத நிலையத்திலும் இந்த காரணத்துக்காக அந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் உட்பட 60 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

இந்திய மத்திய அரசின்

## பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகின்றது

(டில்லி)

இந்தியாவின் மக்களவையான லோக்சபாவினதும், மாநிலங்களவையான ராஜ்ய சபாவினதும் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா இன்று உரையாற்றவுள்ளார். சுமார் இரண்டு மாத காலம் நீடிக்க இருக்கும் இக்கூட்டத்தொடரில் வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ரயில்வே பட்ஜெட் எதிர்வரும் புதன்கிழமையன்றும், பொது பட்ஜெட் எதிர்வரும் சனிக்கிழமையன்றும் தாக்கல் செய்யப்படவுள்ளது.

## கூட்டணி உறவு நீடிக்கும் அமைச்சர் தங்கபாலு நம்பிக்கை

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கும், அ. இ. அ தி மு. கவிற்கும் இடையேயான கூட்டணி உறவு தொடர்ந்து நீடிக்கும் என்று மத்திய நலத்துறை இணையமைச்சர் கே. வி தங்கபாலு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில்; கூட்டணியின் இறுதிநிலை பற்றி பிரதமர் நரசிம்மராவும், முதல்வர் ஜெயலலிதாவும் மட்டுமே முடிவு செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தனைக்கு

தெரியாமல் இருப்பது மோசம், தெரியவிருப்ப மில்லாமல் இருப்பது அதைவிட மோசம்.

- ஆபிரிக்கப் பழமொழி

# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 22 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2833 நிர்வாகபீடம் 2023

## அரசு பாதுகாப்பளிக்கும் சட்ட விரோதிகள்

யாழ். கடல் நீரேரிப் பகுதியில், சிறிலங்கா கடற்படையினர் பயணிகள் மீது மேற்கொள்ளும் தாக்குதல்கள் சட்ட விரோதமானவை. இவை குறித்து அரச சார்பற்ற விசாரணை உடன் நடத்தப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் குழு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

யாழ். கடல் நீரேரி அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்ததே ஒழிய, அப் பகுதியில் பயணம் செய்பவர்களைக் கொல்லுமாறு கடற்படையினருக்கு இத் தடைச் சட்டம் அனுமதி அளிக்கவில்லை என்பதே மனித உரிமைகள் குழு முன்வைக்கும் வாதமாகும் அதாவது பயணிகளைக் கொல்வது சட்டவிரோதமானது. முடிந்தால் தடுத்து நிறுத்துவதே சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமையாகும் என்பதே மனித உரிமைக்குழுவின் நிலைப்பாடாகும்.

சிறிலங்கா அரசின் சட்ட அமுலாக்கம் குறித்து மனித உரிமைகள்குழு கேள்வி எழுப்பியிருப்பதும், கிளாலிக் கடற்பரப்பில் கடற்படை மேற்கொண்ட கொலைகள் சட்டவிரோதமான நடவடிக்கை எனக் கூறியிருப்பதும், வரவேற்கத் தக்கதொன்றேயாகும், ஆனால் இலங்கையில் சட்டம், ஆட்சி என்பது கேலிப்பொருளாகி இன்று பல வருடங்கள் கடந்து விட்டது என்பது வேறு விடயம்.

அதாவது, இன்று கிளாலிக் கடற்பரப்பில் நடப்பது போன்றே தடுத்து நிறுத்து எனச் சட்டம் கூறும்போது சிறிலங்கா கடற்படை சுட்டுத் தள்ளுவது போன்றே கடந்த காலத்திலும் சிறிலங்கா அரசாங்கம் இயற்றிய சட்டங்கள் தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தப் பட்டன. அதே வேளை தமிழருக்கு சில உரிமைகள், சலுகைகள் வழங்குவதெனக் கூறிக் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் உதாசீனம் செய்யப்பட்டன.

தமிழ் மக்களைத் தனது பிரஜைகளாகக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம் என்றுமே அவர்களை தனது நாட்டு மக்கள் எனச் சம உரிமையுடன் நடத்தவில்லை. அதாவது சட்டத்தின் முன் 'இலங்கையர்' அனைவரும் சமனாக நடத்தப்படவில்லை. இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற ரீதியிலேயே தமிழர்களை நடத்தி வந்தனர். இதன் காரணமே இன்று இலங்கையில் பெரும் இரத்தக் களரி ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அதேவேளை, சிங்கள பேரினவாதமும் தொடர்ந்தும், ஒடுக்கு முறைச் சட்டங்களையும் ...

# வறுமையின் கோரப்பிடியில் சிக்கியுள்ள ஈச்சிலம்பத்தைத் தமிழர்கள்

### சிங்கள அரசு திட்டமிட்டு புறக்கணிப்பு

ஈச்சிலம்பத்தை கிராமத்தில்வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் உண்ண உணவின்றியும், உடுக்கத் துணிமணியின்றியும், இருப்பிடவசதியின்றியும் அலைப்படும் ஓர் அவல நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

திருக்கோணமலை மாவட்டத்தின் தென்பகுதியில் இருக்கும் ஈச்சிலம்பத்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் பத்தொன்பது தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஏழாயிரம் தமிழர்கள் வாழ்கின்றனர். மேலும் இலங்கைத்துறை, கறுக்காமுனை, புன்னையடி, வாழைத்தோட்டம், வெருகல், முகத்துவாரம் முதலான கிராமங்களில் மிகவும் வறிய நிலையில் பழங்குடியினரான மக்கள் வாழ்ந்து வருகின்றனர், மூதூர் பிரதான நகரில் இருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் அமைந்துள்ள இவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டக்களப்பிலிருந்து சுமார் நாற்பத்தெட்டு மைல் தொலைவு உடையதாகும்.

இயல்பாகவே வெள்ளத்தாலும், வரட்சியாலும் அடிக்கடி மாறிமாறிப் பாதிப்புறும் இந்தப் பிரதேசத்தில் மகாவலி ஆற்றின் பெருக்கெடுப்பின் காரணமாகவும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது.

சுமார் பதினெட்டாயிரம் ஏக்கர் நெற்செய்கைப்பரப்பை கொண்ட இப்பிரதேசம் இன்று இராணுவத்தின் அடாவடித்தனங்கள் மற்றும் வறுமை நிலை, உழவு இயந்திர வசதியின்மை, விதைநெல் உரவகை கிருமிநாசினி போன்றவற்றின் இன்மைகள் என்பவற்றால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது.

சாதாரணமாக மகாவலி ஆற்றின் ஓரக்கரையில் மேட்டு நில விவசாயத்தில் ஈடுபட்டு வந்த இப்பகுதி மக்களின் நீர் இறைப்பு இயந்திரங்கள் வன்செயல் கலவரங்களின்போது அபகரிக்கப்பட்டமையால் அந்த விவசாய முயற்சியும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் மீனவர்களின் வலைகள், வள்ளங்கள் சேதமாக்கப்பட்டமையாலும் இராணுவக் கெடுபிடிகள் காரணமாகவும் மீன்பிடித் தொழிலில் கூட ஈடுபட முடியாத நிலை இங்கு ஏற்பட்டுள்ளது.

ஈச்சிலம்பத்தை கிராமத்தில் அமைந்திருந்த ஒரே பொது அரசினர் வைத்தியசாலை செயலிழந்து போயுள்ளமையால் இப்பிரதேச மக்கள் வைத்திய சிகிச்சை பெறுவதில் அனுபவிக்கும் சிரமங்களோ சொல்லுந்தரமன்று. உடனுக்குடன் சிகிச்சை பெற முடியாமல் கர்ப்பிணிப் பெண்களும் கடுமையான நோயாளிகளும் பெரும் அவல நிலைக்கு உள்ளாகி வருவதுடன் இக் காரணத்தினால் பலர் மரணத்தையும் தழுவிக் கொண்டுள்ளனர்.

அத்துடன் மட்டக்களப்பு-வெருகல் பஸ் சேவையும், மூதூர்-வெருகல் பஸ்சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் போக்குவரத்து என்பது பெரும் பிரச்சினையாகியுள்ளது. பல மைல் தூரத்தை நடந்துதான் கடக்கவேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் ஒன்பது கிராமங்களில் பாடசாலைக் கட்டடங்கள் இருந்த போதும் தளபாடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளமையாலும் கட்டடங்கள் சேதமுற்றுள்ளமையாலும் நிலத்தில் இருந்து தான் கல்விகற்க வேண்டிய நிலையில் மாணவர்கள் உள்ளனர்.

இதுதவிர வன்செயல் பாதிப்பு காரணமாக அரசு வழங்குவதாகக் கூறும் நிவாரணம்எதுவும் கூட இப்பகுதியை எட்டவில்லை, சேதம் அடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு கூட நிவாரணம் வழங்கப்படவில்லை, இதே நிலையில் இப்பகுதியில் வாழும் மக்கள் அனுபவிக்கும் துன்பமும். துயரமும் வர்ணிக்க வார்த்தைகள் இல்லை என்றே கூறலாம்.

மேலும் அரசாங்கத்தினால் ஏனைய பகுதிகளில் அமுலாக்கப்படும் வறுமை ஒழிப்பு நிவாரணத் திட்டமுமான ஜனசவிய திட்டம்கூட இங்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை. அத்துடன் இங்குள்ள கிராமங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்களும், கிராமத்தை விட்டு வெளியிடங்களுக்குத் தொழிலுக்காகச் சென்று வர முடியாத கட்டுப்பாடும் இந்தப் பிரதேச மக்களை வறுமைக்குள் தள்ளிவிட்டுள்ளது.

---

### ஆந்திராவில் கடத்தப்பட்ட

# பால்ராஜ் எம்.எல்.ஏயும் அரச அதிகாரியும் நேற்று விடுதலை

(சென்னை)

ஆந்திரப் பிரதேசத்தில் நக்சலைட்டுக்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரானபால்ராஜுவும், அரச அதிகாரியான திம்மண்ணராஜு ஆகிய இருவரும் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டனர். இதையடுத்து இவ் இருவரும் நேற்றுக்காலை எட்டு மணியளவில் கோய்யூர் வந்து சேர்ந்தனர்.

இதன் மூலமாக கடந்தஇருபத்து மூன்று நாள்களுக்கு மேலாக நீடித்த கடத்தல் நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளது.

கடத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பது குறித்து ஆந்திராப் பிரதேசமுதலமைச்சர் விஜய பாஸ்கர ரெட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

## சிறைச்சாலையில் கைதிகள் மோதல்

### ஒருவர் பலி

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக பொறளை பொலிசார் தற்போது விசாரணைகளைமேற் கொண்டு வருகின்றனர்.

## யாருடைய உதவியையும் பா.ஜ. நாடவில்லையாம்

(டில்லி)

தமிழ்நாட்டில் தமது கட்சி வளர்ந்து வருவதாகவும், கட்சியின்வளர்ச்சிக்கு வேறெந்தக் கட்சியையும் சார்ந்துஇருக்கவில்லை எனவும் பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச்செயலாளர் கோவிந்தாச்சார்யா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; புதுடில்லியில் இம்மாதம் இருபத்தைந்தாம் திகதி நடக்க இருக்கும் பேரணியில் எந்த விதமான வன்செயல்களும் இடம்பெறாது எனவும் தெரிவித்தார். அயோத்தியா சம்பவங்கள் போன்ற எவையும் இடம்பெற மாட்டாது என

## ஒருக்குமுறை அனைத்தையும் அழித்தொழிக்கும்போராட்டம்

(குருநகர்)

–இமயவன்

"இந்த மண்ணின் எதிர்காலச் சந்ததி தம்மீது சுமத்தப்பட இருக்கும் சுமையை எங்களால் குறைக்கப்பட வேண்டும் என்ற நிலையில் எதிர் பார்த்துக் காத்து நிற்கிறது.

இங்கே ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அனைத்து ஒடுக்கு முறைகள், சுரண்டல் முறைகளை அழித்து ஒழிக்கும் போராட்டம்

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. ஆ.அல்பேட் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து இமயவன் பேசுகையில் கூறியதாவது;

"வரலாறு நாட்டின் -எமது மண்ணின் விடுதலையை ஏற்படுத்தும் என்றே அறைகூவிக் கொண்டிருக்கிறது. அந்த

ஒழிய, அப் பகுதியில் பயணம் செய்பவர்களைக் கொல்லுமாறு கடற்படையினருக்கு இத் தடைச் சட்டம் அனுமதி அளிக்கவில்லை என்பதே மனித உரிமைகள் குழு முன்வைக்கும் வாதமாகும் அதாவது பயணிகளைக் கொல்வது சட்டவிரோதமானது. முடிந்தால் தடுத்து நிறுத்துவதே சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமையாகும் என்பதே மனித உரிமைக்குழுவின் நிலைப்பாடாகும்.

சிறிலங்கா அரசின் சட்ட அமுலாக்கம் குறித்து மனித உரிமைகள்குழு கேள்வி எழுப்பியிருப்பதும், கிளாலிக் கடற்பரப்பில் கடற்படை மேற்கொண்ட கொலைகள் சட்டவிரோதமான நடவடிக்கை எனக் கூறியிருப்பதும், வரவேற்கத் தக்கதொன்றேயாகும், ஆனால் இலங்கையில் சட்டம், ஆட்சி என்பது கேலிப்பொருளாகி இன்று பல வருடங்கள் கடந்து விட்டது என்பது வேறு விடயம்.

அதாவது, இன்று கிளாலிக் கடற்பரப்பில் நடப்பது போன்றே தடுத்து நிறுத்து எனச் சட்டம் கூறும்போது சிறிலங்கா கடற்படை சுட்டுத் தள்ளுவது போன்றே கடந்த காலத்திலும் சிறிலங்கா அரசாங்கம் இயற்றிய சட்டங்கள் தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தப் பட்டன. அதே வேளை தமிழருக்கு சில உரிமைகள், சலுகைகள் வழங்குவதெனக் கூறிக் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் உதாசீனம் செய்யப்பட்டன.

தமிழ் மக்களைத் தனது பிரஜைகளாகக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம் என்றுமே அவர்களை தனது நாட்டு மக்கள் எனச் சம உரிமையுடன் நடத்தவில்லை. அதாவது சட்டத்தின் முன் 'இலங்கையர்' அனைவரும் சமனாக நடத்தப்படவில்லை. இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற ரீதியிலேயே தமிழர்களை நடத்தி வந்தனர். இதன் காரணமே இன்று இலங்கையில் பெரும் இரத்தக் களரி ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அதேவேளை, சிங்கள பேரினவாதமும் தொடர்ந்தும், ஒடுக்கு முறைச் சட்டங்களையும், சட்டங்களுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றது.

இதேவேளை, ஆரம்பத்தில், சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகவே சட்ட விரோதச் செயல்களையும், அடக்கு முறைச்சட்டங்களையும் பிரயோகித்து வந்தாலும் இன்று இலங்கை பூராவுமே சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடும் ஓர் அமைப்பாக அரசாங்கம் மாறியுள்ளது.

1987—1989 ஆம் ஆண்டுக்கிடையில் அரசாங்கம் அமைத்த சட்டவிரோதக் குழுக்கள் 60,000 க்கும் அதிகமான சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்தன இதேவேளை, சிறிலங்கா சட்டபூர்வமாக உருவாக்கிய இராணுவமும், சட்டவிரோதமாக உருவாக்கிய குழுக்களும் இணைந்து வடக்கிலும் - கிழக்கிலும் பல்லாயிரக்கணக்கானோரை சட்டத்தையும் மீறிப்படுகொலைசெய்தன.

இந் நிலையில், சிறிலங்கா அரசாங்கம் சட்டவிரோத செயல்கள் பற்றி விசாரணைக்குழு அமைப்பதினால் பயன் எதுவும் ஏற்பட்டு விடுமா என்பதும் சந்தேகமே. அரசு நியமிக்கும் விசாரணைக்குழுக்கள் படுகொலைகளுக்கு காரணம் தேடுபவையாக இருக்குமே ஒழிய நீதியான விசாரணை நடத்தும் எனக்கூறிவிட முடியாது. ஏனெனில் கொக்கட்டிச்சோலைப் படுகொலை, வற்றாப்பளை அம்மன் கோவில் மீதான தாக்குதல் தொடர்பாக நடாத்தப்பட்ட விசாரணை முடிவுகள் இதனையே உணர்த்துவதாகவுள்ளன. ஆகையினால் சட்டவிரோத செயல்கள் நிறுத்தப்பட வேண்டுமானால் விசாரணைக் கமிஷன்களால் எதுவும் சாதிக்க முடியாது. சகலரையும் சம உரிமையுடன் நடத்தும் அரசுதான் உருவாகவேண்டும்.

---

...யதாகும்.

இயல்பாக வெள்ளத்தாலும், வரட்சியாலும் அடிக்கடி மாறிமாறிப் பாதிப்புறும் இந்தப் பிரதேசத்தில் மகாவலி ஆற்றின் பெருக்கெடுப்பின் ... பட்டமையாலும் இராணுவக் கெடுபிடிகள் காரணமாகவும் மீன்பிடித் தொழிலில் கூட ஈடுபட முடியாத நிலை இங்கு ஏற்பட்டுள்ளது.

ஈச்சிலம்பத்தை கிராமத்தில் அமைந்திருந்த ஒரே ... [illegible] கிராமங்களில் பாடசாலைக் கட்டடங்கள் இருந்த போதும் தளபாடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளமையாலும் கட்டடங்கள் சேதமுற்றுள்ளமையாலும் நிலத்தில் இருந்து ... டிருக்கும் இராணுவ முகாம்களும், கிராமத்தை விட்டு வெளியிடங்களுக்குத் தொழிலுக்காகச் சென்று வர முடியாத கட்டுப்பாடும் இந்தப் பிரதேச மக்களை வறுமைக்குள் தள்ளிவிட்டுள்ளது.

---

### ஆந்திராவில் கடத்தப்பட்ட

# பால்ராஜ் எம்.எல்.ஏயும் அரச அதிகாரியும் நேற்று விடுதலை

(சென்னை)

ஆந்திரப் பிரதேசத்தில் நக்சலைட்டுக்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரான பால்ராஜுவும், அரச அதிகாரியான திம்மன்னராஜு ஆகிய இருவரும் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டனர். இதையடுத்து இவ்விருவரும் நேற்றுக்காலை எட்டு மணியளவில் கொய்யூர் வந்து சேர்ந்தனர்.

இதன் மூலமாக கடந்த இருபத்து மூன்று நாட்களுக்கு மேலாக நீடித்த கடத்தல் நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளது.

கடத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பது குறித்து ஆந்திராப் பிரதேசமுதலமைச்சர் விஜய பாஸ்கர ரெட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

## சிறைச்சாலையில் கைதிகள் மோதல்

### ஒருவர் பலி

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக பொறளை பொலிசார் தற்போது விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர்.

## யாருடைய உதவியையும் பா.ஜ. நாடவில்லையாம்

[டில்லி]

தமிழ்நாட்டில் தமது கட்சி வளர்ந்து வருவதாகவும், கட்சியின்வளர்ச்சிக்கு வேறெந்தக் கட்சியையும் சார்ந்துஇருக்கவில்லை எனவும் பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுச்செயலாளர் கோவிந்தாச்சார்யா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; புதுடில்லியில் இ-மாதம் இருபத்தைந்தாம் திகதி நடக்க இருக்கும் பேரணியில் எந்த விதமான வன்செயல்களும் இடம்பெறாது எனவும் தெரிவித்தார். அயோத்தியா சம்பவங்கள் போன்ற எவையும் இடம்பெற மாட்டாது எனவும் குறிப்பிட்டார்.

### பாராளுமன்றத்தில்

## பிரச்சினைகளை கிளப்ப இடதுசாரிகள் முடிவு

(டில்லி)

பாராளுமன்றக் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகிய பின்னர், வகுப்புவாத உணர்வுகளால் நாடு சீர்கெட்டுள்ள நிலை, அயோத்தியா விவகாரம், விலைவாசி உயர்வு போன்ற பல பிரச்சினைகளை எழுப்புவது என்று இந்தியாவின் இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக முடிவுசெய்துள்ளன.

புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இடதுசாரிக் கட்சிகளின் கூட்டுக் கூட்டத்தின்போது இம் முடிவு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## பட்டதாரி ஆசிரியர்கள் தமிழகத்தில் வேலைநிறுத்தம்

(சென்னை)

ஊதிய விகித மேம்பாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தி முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இவ் வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி கோரியுள்ள மாநில கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் ஊதிய விகிதத்தைச் சம்பள நிர்ணய கமிஷன்தான் முடிவுசெய்யவேண்டும் எனவும் தமிழக அரசு அதனை அமுல்படுத்தத்தான் முடியுமெனவும் தெரிவித்தார்.

சேலத்தில் தலைமையாசிரியர்கள் மாநாட்டில் பேசிய அமைச்சர் மேலும்கூறுகையில்; வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு வேலை நிறுத்தக் காலத்தின்போது ஊதியம் வழங்கப்படமாட்டாதெனவும் குறிப்பிட்டார்.

## ஒடுக்குமுறை அனைத்தையும் அழித்தொழிக்கும்போராட்டம்

(குருநகர்)

—இமயவன்

"இந்த மண்ணின் எதிர்காலச் சந்ததி தம்மீது சுமத்தப்பட இருக்கும் சுமையை எங்களால் குறைக்கப்பட வேண்டும் என்ற நிலையில் எதிர் பார்த்துக் காத்து நிற்கிறது.

இங்கே ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அனைத்து ஒடுக்கு முறைகள், சுரண்டல் முறைகளை அழித்து ஒழிக்கும் போராட்டம் அது."

இவ்வாறு விடுதலைப்புலிகள் தொழிற்சங்கப் பிரதிநிதி திரு. இமயவன் தெரிவித்தார்.

கடந்த (19-2-93) வெள்ளிக்கிழமை நடைபெற்ற வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம் யாழ். உபபணிமனையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவிதம் கூறினார்.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. க. அல்பேட் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து இமயவன் பேசுகையில் கூறியதாவது;

"வரலாறு நாட்டின் -எமது மண்ணின் விடுதலையை ஏற்படுத்தும் என்றே அறைகூவிக் கொண்டிருக்கிறது. அந்த அறை கூவலை இம்மண்ணின் சகலதுறை மக்களும் செவிசாய்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சங்க செயலாளர், பொருளாளர்களின் அறிக்கைகளைத் தொடர்ந்து திருவாளர்கள் சின்னையா, அமிரன் இராசநாயகம், ம. வஸ்தியாம்பிள்ளை, த. பரமலிங்கம், 'சாளரம்' சஞ்சிகை பிரதிநிதி திருமலை யோகேந்திரா, யாழ். பிரதேச விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் திரு. குட்டி ஆகியோரும் கருத்துரையாற்றினர்.

இறுதியில் நடப்பாண்டின் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. (21)

## ஏயா லங்கா உபகரணங்கள் திருட்டு

[கொழும்பு]

ஏயர் லங்காவுக்குச் சொந்தமான மூன்றுக் கரண்டி, கத்தி மற்றும் கரண்டி ஆகியவற்றைக் களவாடினர் என்ற சந்தேகத்தின் பேரில் ஏயர் லங்கா சிப்பந்திகள் மூவர் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஏயர் லங்காவுக்குச் சொந்தமான மேற்படி பொருள்கள் நீர்கொழும்பில் வீடொன்றில் இருப்பதாக வெளிவந்த பத்திரிகைச் செய்தியை அடுத்து பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

## நன்கொடை

(கொடிகாமம்)

கிளாலி கடலில் கடந்த வெள்ளியும் [19-2-93] நேற்றும் [21-2-93] பலியான பண்டிதர் குடியிருப்பைச்சேர்ந்த இருபடகோட்டிகளின் குடும்பத்தினருக்கும் தலா (1000/-ரூபா) வை கிளாலி கடல் தொழிலாளர் சங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது. [86

### தெரிவுக்குழு ஆராய்வதால்

# இனப்பிரச்சினை குறித்து விவாதம் நடத்த முடியாதாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினை பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்னிலையில் உள்ளது முக்கியமான விஷயமான இனப்பிரச்சினை பாராளுமன்றத்தின் பரிசீலனையில் உள்ளபோது அது குறித்துப் பகிரங்க விவாதம் நடத்துவது முறையாகாது.

இனப்பிரச்சினை குறித்தும் பகிரங்க விவாதம் நடத்தப்படவேண்டு என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் எழுதிய கடிதத்துக்குப் பதிலளித்த ஜனாதிபதியின் செயலாளர் கே.எச்.கே. விஜயதாஸ இவ்வாறு எழுதியுள்ளார்.

பகிரங்க விவாதம் பொருளாதாரப்பிரச்சினை சம்பந்தப்பட்டதாக, அதுவும் குறிப்பாக அபிவிருத்தி மற்றும் உற்பத்தி பற்றியதாக இருக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை ஜனவரி 21-இல் ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு எழுதிய கடிதத்தில் தெரியப்படுத்தியுள்ளார் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் குமார்பொன்னம்பலத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குமார் பொன்னம்பலம் எழுதியுள்ள பதில் கடிதத்தில், இனப்பிரச்சினையை ஜனாதிபதி எவ்வாறு தீர்க்கவுள்ளார் என்பதை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துமாறு வற்புறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அல்லது ஐக்கிய தேசியக் கட்சி இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் ஒன்றை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கவில்லை இது துரதிர்ஷ்டவசமானது. இன்று முக்கியமாகக் கருதப்படும் இனப்பிரச்சினை தவிர்ந்த வேறு விஷயங்களைப் பற்றி விவாதம் புரிவது பிரச்சினையை வேறு வழியில் திருப்புவதாகும் என்று குமார் பொன்னம்பலம் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிரேமா அரசுக்கு எதிராக பத்திரிகையாளர் ஊர்வலம்

(கொழும்பு)

சுதந்திர பத்திரிகைகளுக்கு எதிராக பிரேமதாசா அரசாங்கம் எடுத்துவரும் அடக்குமுறை நடவடிக்கையைக் கண்டித்து இன்றுநண்பகல் 12மணியளவில் கொழும்பு பொரளை சந்தியிலிருந்து ஊர்வலம்ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை "லக்திப" பத்திரிகை "சீல்" வைக்கப்பட்டது தொடர்பாக கொஸ்கஸ் சந்தியிலிருந்து கொழும்பு மாநகர முதல்வருக்கு எதிராகப் பத்திரிகையாளர் ஊர்வலம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

பிரேமதாசா அரசாங்கம் பத்திரிகையாளரை எவ்வளவு நசுக்கமுடியுமோ அவ்வளவிற்கு நசுக்க முயல்கிறது. எனவே எதிர்க்கட்சிகள் இச்சதியினை முறியடிக்க முன்வரவேண்டும் என பத்திரிகையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## நாகர்கோயில் கிழக்கில் 894 அகதிக் குடும்பங்கள்

(வடமராட்சி)

நாகர்கோயில் கிழக்குக் கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்னமும் 894 குடும்பங்கள் அகதிகளாக இருப்பதாகக் கிராம உத்தியோகத்தர் திரு ந.பாலசுந்தரம் தெரிவித்தார்.

இப்பிரிவில் வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 816 குடும்பங்களும், வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 19 குடும்பங்களும் மற்றும் ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை பிரதேசசெயலர் பிரிவுகளைச் சேர்ந்த 59 குடும்பங்களுமே இன்னமும் இருந்துவருவதாகவும், இவர்களுக்கான நிவாரணப் பணிகள் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (யோ)

## இளைஞர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வவுனியா சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்ட சண்முகம் தமிழ்மாறன் (வயது 25) என்பவர் பல மாதங்களின் பின் கொழும்பு தடுப்பு முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் படச்சுருள்களை கொழும்புக்கு எடுத்துச் செல்லும்போது வவுனியாவில் கைது செய்யப்பட்டு சிலகாலம் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் கொழும்பு தடை முகாம் ஒன்றுக்கு மாற்றப்பட்டதாகவும் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது இராணுவத்தினர் அடிக்கடி தன்னை துன்புறுத்தியதாகவும் தெரிவித்தார். (இ)

## அதிபர்கள் கவனத்திற்கு

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை ஆசிரியர்களின் வீட்டுவிலாசம், தராதரம், வயது, கற்பிக்கும் பாடங்கள் சம்பந்தமான பூரண விபரங்களை உடனடியாகத் தந்துதவுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோருகின்றார்.

## ராணுவசீருடையில் வந்தோர் தனவந்தர்வீட்டில்கொள்ளை

(கொழும்பு)

இராணுவ வாகனத்தில் சீருடையில்வந்த கோஷ்டி ஒன்று பொரலஸ்கமுவ- பெட்லியான வீதியில் உள்ள ஒரு தனவந்தர் வீட்டில் நகை மற்றும் ரொக்கப்பணத்தினை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு மேற்படி வீட்டிற்கு சீருடையில்வந்த ஐவர் கொண்டகுழு அங்கிருந்தோரை பயமுறுத்திவிட்டு 15 ஆயிரம்ரூபா பணம்மற்றும் 61 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும்கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

யாழ் மக்களின்

[illegible] வோங்கும்'' என்றார்.

''தமிழ் பிரதேச சிங்கள மக்கள் பாதிப்படைவதுடன் தலைநகரில் முக்கிய அரசியல் இராணுவ அதிகாரிகளின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது

யுத்தம் அதிக கூடியளவு உயிர்களை பலிவாங்கியுள்ளது 50 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டு நேரடியாக பாதிக்கப்பட்டுள் [illegible]

## சேவை நிதிக்காக

[illegible]

## தெரிவுக் கூட்டம்

(வடமராட்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினால் அமைக்கப்பட்டு வரும் கிராமிய உற்பத்திக்குழு தெரிவுக் கூட்டம் இன்று நாகர்கோவில் பகுதியில் நடைபெறவுள்ளது.

நாகர் கோவில் மேற்குபிரிவு தெரிவுக் கூட்டம் நாகேஸ்வரா சனசமூக நிலையத்தில் காலை 10 30 மணிக்கும், நாகர் கோவில் கிழக்கு பிரிவு தெரிவுக் கூட்டம் வீமன் படிப்பகத்தில் காலை 11.30 மணிக்கும், நாகர்கோவில் தெற்கு பிரிவு தெரிவுக் கூட்டம் நாகதம்பிரான் ஆலய முன்றலில் மாலை 3.00 மணிக்கும் நடைபெறும். (யோ)

## விடுதலைப்புலிகள்போராளி தமிழ் நாட்டில் கைதாம்

விடுதலைப்புலிகள்போராளி என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் நாகை காயிதேமில்லத் மாவட்டம் அத்திப் பேட்டையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று தமிழ்நாடு பொலிஸ் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

அவரிடமிருந்து சில ஆயுதங்களும், றொக்கட் செலுத்தும் சாதனங்களும், நவீன தகவல் தொடர்புக் கருவிகளும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடுக்கடலில் அவர் பயணம் செய்து கொண்டிருந்த படகு இயந்திரக் கோளாறால் நின்றுபோனதால், கரைக்கு வந்தபோது அவர் கைதுசெய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது

## பொலிஸ் தற்கொலை

பொலிஸார்ஒருவர்டி-56 துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மிரிகான பொலிஸ் றேடியோ நிலையத்தின் அருகில் உள்ள திருமணமாகாத பொலிஸார் தங்கும் விடுதியிலேயே இவர் தற்கொலை செய்துகொண்டார்

### வெடிகுண்டுப் புரளி காரணமாக

# சோனியா சென்ற விமானம் துருக்கியில் தரையிறக்கம்

(டில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி உட்பட 412 பயணிகள் சென்றுகொண்டிருந்த ஏயர் இந்தியா விமானம் ஒன்று வெடிகுண்டு எச்சரிக்கை காரணமாக துருக்கியின் தலைநகர் அங்காராவில் தரையிறக்கப்பட்டது

புதுடில்லியிலிருந்துலண்டன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த விமானம் துருக்கிக்கு மேலாக பறந்துகொண்டிருந்த போது இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து அங்காரா விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானத்தில் வெடிகுண்டு சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் வெடிகுண்டுகள் எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் விமானம் பயணத்தை தொடர்ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழக பத்து வருட நிறைவை முன்னிட்டு இன்று மாலை 3.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் காட்சி உதைபந்தாட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

இவ் உதைபந்தாட்டத்தில் சென் அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து சென். மேரிஸ் கழகம் விளையாட உள்ளது.

## கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவு மனிதஉரிமைமீறல்

### மன்னிப்புச்சபை தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா அரசினால் மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்பட்டுவருகின்ற அதேவேளையில் கிழக்குமாகாணத்திலேயே மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன என சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான அனைத்துலக மன்னிப்புச் சபையின் அறிக்கையில்; இலங்கையில் குறிப்பாகக் கிழக்குமாகாணத்தில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல் செயல்கள் குறித்துவிளக்கமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது

1991-ம் ஆண்டின் நடுப்பகுதியில் கிழக்கில் குறிப்பிடக்கூடியளவு மனித உரிமைமீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ள மன்னிப்புச் சபை, சமீபகாலமாக சிறிலங்கா இராணுவத்தினராலும், ஊர்காவல்படையினராலும் சட்டத்திற்குப் புறம்பான பல கொலைகள் நடத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சிறிலங்கா அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவிடயம் குறித்து சிறிலங்கா அரசு அக்கறையுடன் நடந்துகொள்ளவில்லை எனவும் அது குற்றஞ்சாட்டியுள்ளது

இதேவேளை இதுவரை கிழக்கில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களில் இராணுவம் புரிந்த கொக்கட்டிச்சோலைப் படுகொலையை மட்டுமே சிறிலங்கா அரசு விசாரணைக்குட்படுத்தி முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது

இப்படுகொலை தொடர்பான விசாரணை சுயாதீன விசாரணைக்குழு ஒன்றின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. அவ்விசாரணைகள் பொதுமக்கள் நீதிமன்றத்தில் நடாத்தப்படவில்லை. மாறாக இராணுவ நீதிமன்றத்திலேயே நடாத்தப்பட் [illegible]

## கெற்பலி கடற்கரையில் பொருள்கள் ஒதுங்குகின்றன

(கொடிகாமம்)

கெற்பலி - கச்சாய் கடல் [illegible]

அண்மையில் இரணைதீவுக் கடலில் தாக்குதல்களில் மூழ்கடிக்கப் [illegible]

(கொழும்பு)

சுதந்திர பத்திரிகைகளுக்கு எதிராக பிரேமதாசா அரசாங்கம் எடுத்துவரும் அடக்குமுறை நடவடிக்கையைக் கண்டித்து இன்று நண்பகல் 12மணி அளவில் கொழும்பு பொரளை சந்தியிலிருந்து ஊர்வலம் ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை ''லக்திப'' பத்திரிகை ''சீல்'' வைக்கப்பட்டது தொடர்பாக கொஸ்கஸ் சந்தியிலிருந்து கொழும்பு மாநகர முதல்வருக்கு எதிராகப் பத்திரிகையாளர் ஊர்வலம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

பிரேமதாசா அரசாங்கம் பத்திரிகையாளரை எவ்வளவு நசுக்கமுடியுமோ அவ்வளவிற்கு நசுக்க முயல்கிறது. எனவே எதிர்க்கட்சிகள் இச்சதியினை முறியடிக்க முன்வரவேண்டும் என பத்திரிகையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## இளைஞர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வவுனியா சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்ட சண்முகம் தமிழ்மாறன் (வயது 25) என்பவர் பல மாதங்களின் பின் கொழும்பு தடுப்பு முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் படச்சுருள்களை கொழும்புக்கு எடுத்துச் செல்லும்போது வவுனியாவில் கைது செய்யப்பட்டு சில காலம் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் கொழும்பு தடை முகாம் ஒன்றுக்கு மாற்றப்பட்டதாகவும் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது இராணுவத்தினர் அடிக்கடி தன்னை துன்புறுத்தியதாகவும் தெரிவித்தார். (இ)

## நாகர்கோயில் கிழக்கில் 894 அகதிக் குடும்பங்கள்

(வடமராட்சி)

நாகர்கோயில் கிழக்குக் கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்னமும் 894 குடும்பங்கள் அகதிகளாக இருப்பதாகக் கிராம உத்தியோகத்தர் திரு. ந.பாலசுந்தரம் தெரிவித்தார்.

இப்பிரிவில் வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 816 குடும்பங்களும், வெளி மாவட்டத்தைச் சேர்ந்த 19 குடும்பங்களும் மற்றும் ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை பிரதேசசெயலர் பிரிவுகளைச் சேர்ந்த 59 குடும்பங்களுமே இன்னமும் இருந்துவருவதாகவும், இவர்களுக்கான நிவாரணப் பணிகள் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (யோ)

## அதிபர்கள் கவனத்திற்கு

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை ஆசிரியர்களின் வீட்டுவிலாசம், தராதரம், வயது, கற்பிக்கும் பாடங்கள் சம்பந்தமான பூரண விபரங்களை உடனடியாகத் தந்துதவுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோருகின்றார்.

## ராணுவசீருடையில் வந்தோர் தனவந்தர்வீட்டில்கொள்ளை

(கொழும்பு)

இராணுவ வாகனத்தில் சீருடையில்வந்த கோஷ்டி ஒன்று பொரலஸ்கமுவ- பெட்லியான வீதியில் உள்ள ஒரு தனவந்தர் வீட்டில் நகை மற்றும் ரொக்கப்பணத்தினை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு மேற்படி வீட்டிற்கு சீருடையில்வந்த ஐவர் கொண்டகுழு அங்கிருந்தோரை பயமுறுத்தி விட்டு 15 ஆயிரம்ரூபா பணம்மற்றும் 61 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும்கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

யாழ் மக்களின்

வோங்கும்'' என்றார்.

''தமிழ் பிரதேச சிங்கள மக்கள் பாதிப்படைவதுடன் தலைநகரில் முக்கிய அரசியல் இராணுவ அதிகாரிகளின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

யுத்தம் அதிக கூடியளவு உயிர்களை பலிவாங்கியுள்ளது 50 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டு நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.'' என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம

முறையில் மறியல் போராட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன என தெரியவருகின்றது.

இதேவேளை வடமராட்சி மேற்கு-தெற்கு (கரவெட்டி) பிரதேசசெயலர் பணிமனை முன், தமிழீழ மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கக் கோரி மறியல் போராட்டம் நடைபெறவுள்ளது.

அல்வாய் மக்களினால் அல்வாய் அம்மன் கோவிலடியில் இருந்து இன்று காலை 8 30 மணியளவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று ஆரம்பமாகி பிரதேச செயலர் பிரிவைச் சென்றடைந்து செயலர் பணிமனைமுன் மறியல் போராட்டம் ஆரம்பமாகும்.

தமிழீழத்தில் சிறிலங்கா அரசாங்கம் ஏற்படுத்திவரும் பொருளாதாரத்தடை, போக்குவரத்துத் தடை, பட்டினிச் சாவு நிலை, கடல் வலயத் தடை மற்றும் பல தடைகளை நீக்கக் கோரியே இவ் ஆர்ப்பாட்டப் பேரணியும் மறியல் போராட்டமும் நடைபெறவுள்ளது. (யோ)

பயணிகள் சென்றுகொண்டிருந்த ஏயர் இந்தியா விமானம் ஒன்று வெடிகுண்டு எச்சரிக்கை காரணமாக தருக்கியின் தலைநகர் விமான நிலையத்துக்கு மேலாக பறந்துகொண்டிருந்த போது இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை யடுத்து அங்காரா விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. குண்டுகள் எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் விமானம் பயணத்தை தொடர்ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழக பத்து வருட நிறைவை முன்னிட்டு இன்று மாலை 3.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் காட்சி உதைபந்தாட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

இவ் உதைபந்தாட்டத்தில் சென் அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து சென். மேரிஸ் கழகம் விளையாட உள்ளது.

## கெற்பலி கடற்கரையில் பொருள்கள் ஒதுங்குகின்றன

(கொடிகாமம்)

கெற்பலி - கச்சாய் கடற்கரையோரங்களில் தேங்காய் மூடை, மாசி மா வகைகள், பிஸ்கட் வகைகள் போன்ற பொருள்கள் கரையொதுங்குகின்றன. இதைப் பொதுமக்கள் எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அண்மையில் கிளாலிக் கடலில் தாக்குதல்களில் மூழ்கடிக்கப்பட்ட படகுகளில் இருந்து வரும் பொருள்கள் இவையென அறியப்படுகின்றது.

தொடர்ந்தும் பொருள்கள் கரை ஒதுங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (86)

வடபகுதியில்

யுவதிகளை நாம் விற்பனை செய்கிறோம். ஆடைத்தொழிற்சாலைகளினால் எந்த நாடும் முன்னேறியதில்லை. இந்நாடு இன்று பிழையான திசையில் சென்றுகொண்டிருக்கிறது கல்வி தரை மட்டம் ஆகிவிட்டது'' என்றார்.

புலிகள்

மாட்டார்கள் என தன்னிடம் ஒருவர் கூறினாரென பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

அதற்கு முந்திய நாளன்று பாதுகாப்பு படையினரின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக விடுதலை புலிகள் கடற்படையுடன் கடற்கரையில் குறுகிய ஏரியில் மோதினார்கள். சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஆயிரக்கணக்கான மக்கள் மறுபுறத்தால் தமது பயணத்தை பாதுகாப்பாக மேற்கொண்டார்கள் என்றார்.

## கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவு மனிதஉரிமைமீறல்

### மன்னிப்புச்சபை தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா அரசினால் மனித உரிமைகள்தொடர்ந்தும் மீறப்பட்டுவருகின்ற அதேவேளையில் கிழக்குமாகாணத்திலேயே மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன என சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான அனைத்துலக மன்னிப்புச் சபையின் அறிக்கையில் இலங்கையில் குறிப்பாகக் கிழக்குமாகாணத்தில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல் செயல்கள் குறித்துவிளக்கமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

1991-ம் ஆண்டின் நடுப்பகுதியில் கிழக்கில் குறிப்பிடக்கூடியளவு மனித உரிமைமீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள மன்னிப்புச் சபை, சமீப காலமாக சிறிலங்கா இராணுவத்தினராலும், ஊர்காவல்படையினராலும் சட்டத்திற்குப் புறம்பான பல கொலைகள் நடத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பான விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதாகச் சிறிலங்கா அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவிடயம் குறித்து சிறிலங்கா அரசு அக்கறையுடன் நடந்துகொள்ளவில்லை எனவும் அது குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை இதுவரை கிழக்கில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களில் இராணுவம் புரிந்த கொக்கட்டிச்சோலைப் படுகொலையை மட்டுமே சிறிலங்கா அரசு விசாரணைக்குட்படுத்தி முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

இப்படுகொலை தொடர்பான விசாரணை சுயாதீன விசாரணைக்குழு ஒன்றின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. அவ்விசாரணைகள் பொதுமக்கள் நீதிமன்றத்தில் நடாத்தப்படவில்லை. மாறாக இராணுவ நீதிமன்றத்திலேயே நடாத்தப்பட்டது. இது பொதுமக்களுக்குப் பாதகமானது என மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் ஒருவரின்

சடலம் கரையொதுங்கியது.

மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இச்சடலம் படகோட்டியான மு. நடராசா (வயது 50, கெற்பலி பண்டிதர் குடியிருப்பு) என்பவருடையது என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. (86)

கிளாலி

இப்படகுகள் கிளாலிக் கரையை நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடாத்தியுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு 8 30 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்தும், பூநகரி இராணுவ முகாமிலிருந்தும் நல்லூர், ஆலங்கேணி பகுதிகளை நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக தெரியவருகின்றது (86)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 21-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 1-8372

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-9325, 26-5962, 26-0355, 24-7961, 40-0770,
27-8515, 27-9707, 24-9491, 41-5018, 24 4367,
24-1685, 27-2107, 41-8449, 24-8391, 41-8467.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

22-5857, 22-4766, 26-7949, 40-6979, 24-5119.

சேவை நிதிக்காக
நாடக விழா
குழந்தை
ம. சண்முகலிங்கத்தின்
★ ஒற்றுமையின் சின்னம்
★ புழுவாய்மரமாகி
★ உறவுகள்
இடம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
காலம்: 26 - 02 - 1993 மாலை 3.00 மணி
அன்பளிப்பு: 10/- 20/-
யாழ். மாவட்ட திரிசாரணர்குழு
சாரணியம் சிறப்புற வாழ்த்துவோர்
நியூ லலிதா நகைமாளிகை
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (4327)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது